உ

நற்றுணையாவது நமச்சிவாயவே

நால்வர் பொற்றாள் எம்உயிர் துணையே

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்தது

முனைவர் தமிழாகரர் சித்தாந்த செம்மணி சிவஞான கலாநிதி

பேராசிரியர். பழ. முத்தப்பன் அவர்களின்

71 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்



வெளியீடு:


சிவ. வை.அறிவானந்தம்

சிவ. அ.விஜயலட்சுமி

சேக்கிழார் இல்லம்

83/2, தாயுமானவர் தெரு, நேரு நகர், ஓதூர்–635109.

செல்லிடைப்பேசி: 9842733234


நம்பியாண்டார் நம்பி


உ

திருச்சிற்றம்பலம்

நால்வர் பொற்றாள் எம்உயிர் துணையே

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி அருளியது



விளக்கம்:

முனைவர், தமிழாகரர், சித்தாந்த செம்மணி, சிவஞான கலாநிதி

பேராசிரியர் **பழ. முத்தப்பன்** அவர்கள்

மகிழ்ந்தளிப்பவர்கள்:

சிவ. வை. அறிவானந்தம், தலைவர்

ஓதூர் சிவனடியார் திருக்கூட்டம்

&

அமைப்பாளர்

திருவாவடுதுறை சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி மையம்,

திருவாவடுதுறை சைவசித்தாந்த நேர்முக பயிற்சி மையம்

மற்றும்

பயற்சி மைய மாணவர்கள், ஓதூர் மையம்.

பொருளடக்கம்

பதிப்புரை

தமிழ் கூறும் நல்லுலகம் பெற்ற நற்றவப் பயனாய்த் தோன்றியன பன்னிரு திருமுறைகளாகும். பன்னிரு திருமுறைகளில் இறைவனால் அருளிச் செய்யப் பெற்ற திருமுகப் பாசுரம் என்ற திருப்பதிகத்தை முதல் பதிகமாகக் கொண்ட பதினோராம் திருமுறை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். முந்திய திருமுறைகள் அனைத்தும் ஆண் அடியார்களால் பாடப் பெற்றிருக்க, காரைக்கால் அம்மையாராம் பெண் அடியாரின் பனுவல் இடம்பெற்ற திருமுறை பதினோராம் திருமுறையாகும். முன் திருமுறைகள் போல் பதிகங்களாக அமையாமல் பிரபந்தங்கள் என்ற சிற்றிலக்கிய வகைகளின் தொகுப்பாக அமைந்திருப்பது அதன் சிறப்பாகும். சங்ககால இலக்கியமாம் திருமுருகாற்றுப்படை முதல் நம்பியாண்டார் நம்பியின் பனுவல் வரை தொன்மையும் புதுமையும் அமைந்த இலக்கியங்களைக் கொண்ட திருமுறையுமாகும். இத்தகைய தனித்த சிறப்புக்களைப் பெற்ற பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஒரு இலக்கியமாக விளங்குகிறது. திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்திற்குச் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை முதல் நூலாக அமைந்திட, அதன் வழி நூலாக அமைந்தது இத் திருத்தொண்டர் திருவந்தாதியாகும். சைவப் பெருமக்களிடையே திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் புராணமும் சிறப்புடன் பயிலப் பெறும் அளவிற்குத் திருத்தொண்டர் திருவந்தாதி பயிலப்பெறவில்லை என்பது மறுத்தற்கு இயலாததாகும். பெரிய புராண அடியார்களின் வரலாற்றை மிகச் சுருக்கமாகத் தனியொரு பாடலில் கூறுகின்ற இவ்விலக்கியமும் பயிற்சிக்குரிய பாடலாக அமையவேண்டும் என்ற எண்ணம் ஓசூர் சிவனடியார் கூட்டத்தில் பரவலாகப் பேசப்பெற்றது.

கர்நாடக மாநிலத்தின் எல்லை ஓரத்தில் அமைந்துள்ள ஓசூர் நகரம் தொழிற்பேட்டை நகரமாக விளங்குவதோடு, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் கலந்து வாழும் பெருநகரமாக விளங்குகிறது. நகரத்தில் சைவ சமயப்

பற்றாளர்கள் அதிகம் இருப்பினும், தமிழ்மொழி வழியில் சைவம் வளர்ச்சியடைய இங்கு பல தொண்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. திரு அருள் திரு.திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானத்தின் அருளாசியுடன் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் நடைபெறும் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பும், திருமுறை நேர்முறைப் பயிற்சி வகுப்பும் தக்க ஏற்பாட்டோடு, தகுதி நிறைந்த பேராசிரியர்களால் எங்கள் திருக்கூட்டத்தின் சார்பில் நகரின் மையப் பகுதியில் நடைபெற்று வருகிறது. அதிலும் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பிற்கு 2016 - 2017 தொகுப்பிற்குப் பேராசிரியராகப் பணியாற்ற எம் கூட்டத்தாரால் பெருவிருப்போடு அழைக்கப் பெற்றுப் பணியாற்றுபவர் முன்னாள் கல்லூரி முதல்வரும், இன்னாள் சைவசித்தாந்தச் செம்மலுமாக விளங்குகின்ற முனைவர். பழ. முத்தப்பன் ஆவார். அப்பெரியார் திங்கள் தோறும் மூன்றாம் ஞாயிறு சித்தாந்தப் பயிற்சியோடு மாலைநேரத்தில் திருவாசக விளக்கவுரையை வழங்க, எங்கள் அடியார் கூட்டம் கேட்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

கொண்டுவந்து மனைப்புகுந்து என்று தொடங்கும் (இளையான்குடி மாற நாயனார் புராணம் - பா.4) என்ற பாடலின் பொருளை நடைமுறையாகக் கொள்ளும் விழாவினை எம் பேராசிரியர் அவர்கள் தமது எழுபத்தோராவது அகவை விழாவாக நடத்துவதை அறிந்த பொழுது மிக்க மகிழ்ச்சியுற்றோம். சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டைச் சேர்ந்த புதுவயலின் ஒரு பகுதியான சாக்கோட்டையில் 28-5-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் விழாவில், ஏதேனும் ஒரு பணியை எம் அடியார் கூட்டம் ஏற்க வேண்டும் என்று முடிவு செய்தது. எம் பேராசிரியரின் விழாவில் அவர்தம் உரைநூல் ஒன்றைப் பதிப்பித்து வெளியிடத் திருவருள் ஆணை கிடைத்தது. அதன்படி பல நூல்களுக்கு உரையெழுதிய அன்னாரின் உரையோடு கூடிய திருத்தொண்டர் திருவந்தாதி பிரபந்தத்தைப் பதிப்பித்து வெளியிடுகிறோம். இப்பதிப்பை வெளியீடு செய்கின்ற எம் கூட்ட அமைப்பாளரும், திறமை மிக்க தலைவருமாகிய சிவத்திரு. வை. அறிவானந்தம் போற்றுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள். சிவம்பெருக்கும் சீலர், பெரியபுராண உரைத்தொண்டர், திருவாசகயத்தையே உருவமாகக்

கொண்ட, நூற்றாண்டைக் கண்ட அமரர் பா. வைத்தியலிங்கம் அவர்களின் தவப்புதல்வர் சிவத்திரு. அறிவானந்தம் அவர்கள் இப்பதிப்பை வெளியீடு செய்ய எடுத்துக் கொண்ட முயற்சி போற்றுதற்கு உரியதாகும்.

எழுபத்தோராவது அகவையைக் காணுகின்ற எம் பேராசிரியர், அவர்தம் துணைவியார் அம்மையார் அழகம்மை முத்தப்பன் அவர்களோடும், அவர்தம் குடும்பத்தாரோடும் பல்வளமும் பெற்று நீடு வாழ்ந்திட, எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுகின்றோம். அதுபோல நூலை வெளியிடும் சிவத்திரு. வை. அறிவானந்தம், அவர்களும் அச்சிட்ட அச்சகத்தாரும், உதவி செய்த சைவ அன்பர்களும் இறையருளால் எல்லா நலமும் பெற்றிட வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இவண்,
சைவ சித்தாந்த மாணவர்கள்
மற்றும்
சிவனடியார் திருக்கூட்டம், ஓசூர்.

முன்னுரை

உலகச் சமயங்களில் தொன்மைச் சமயம் சைவ சமயம் ஆகும். இச் சமயத்தைத் தோற்றுவித்தவர் , தோற்றுவித்த காலம் இவை குறிப்பிட்டுக் கூற முடியாத அளவிற்கு மிகவும் பழமை வாய்ந்ததாகும். எனினும் மைதிகழ் கண்டனாம் சிவபெருமானைத் தலைமையாகக் கொண்டு, சிவசம்பந்தம் உடைய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது சைவசமயம் என்பது உலகோர் ஏற்றுக் கொண்டதாகும். ஒவ்வொரு சமயத்திற்கும் வேத நூல்கள் இருப்பது போலச் சைவ சமயத்திற்கும் பன்னிரு திருமுறைகளும், அவைகளையொட்டி இலக்கண நூல்களாக அமைந்த பதினான்கு சாத்திரங்களும் சைவ சாத்திரத்திற்கு வேத

நூல்களாக விளங்குகின்றன. 27 அருளாளர்களால் பாடி அருளப்பெற்ற சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையாக விளங்குவது சைவ சமயச் சிற்றிலக்கியத் தொகுப்பாகும். வினையின் நீங்கி விளங்கிய அறிவினை உடைய துணைவனாகிய சிவபெருமானாலும், அம்முழு முதற் பொருளின் திருவருளை முழுமையாகப் பெற்ற மெய்யடியார்கள் பதினொருவராலும் ஆகப் பன்னிருவரால் அருளிச் செய்யப் பெற்ற செழும் பாடல்களைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவது பதினோராம் திருமுறை எனப்படும்.

இத்திருமுறையில் இடம் பெற்றுள்ள நாற்பது பிரபந்தங்களில் (சிற்றிலக்கியங்களில்) சிவபெருமானைப் போற்றும் இலக்கியங்கள் இருபத்தைந்தாகும். மூத்த பிள்ளையாராம் விநாயகப் பெருமானைப் போற்றும் பிரபந்தங்கள் மூன்றாகும். செந்தமிழ்க் கடவுளாகிய முருகனைப் போற்றுகின்ற திருமுருகாற்றுப்படை என்ற பிரபந்தம் ஒன்றாகும். மேலும் இறைவனது திருவருள் பெற்ற திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களின் சிறப்பினை விரித்துரைக்கின்ற பிரபந்தங்கள் பதினொன்றாகும். இவ்வாறு அமைந்த நாற்பது பிரபந்தங்களும் அந்தாதி, இரட்டை மணிமாலை, உலா,கலம்பகம், மும்மணிக்கோவை, நான்மணிமாலை, எழுகூற்றிருக்கை என்ற யாப்புகள் பற்றியும், வெண்பா, விருத்தம், கலிவெண்பா என்ற செய்யுள் வகைகளைப் பற்றியும், காரெட்டு, ஒருபா ஒருப.்.து, ஏகதச மாலை, திருஈங்கோய்மலை எழுபது என எண்ணிக்கைகளைப் பற்றியும், , கோபப்பிரசாதம், ஆற்றுப்படை, திருமறம், பாசுரம், திருத்தொகை எனப் பொருள்வகைப் பற்றியும், , பெருந்தேவ பாணி என்று இயலிசையைப் பற்றியும், பெயர்களைக் கொண்ட பிரபந்தங்கள் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இத்திருமுறையில் கிடைப்பனவாகப் பதிக்கப் பெற்ற பாடல்கள் 1430 பாடல்களாகும். இதில் இத்திருமுறையைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி பாடிய பிரபந்தங்கள் பத்து ஆகும்.

நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் என்ற திருத்தலத்தில் ஆதிசைவ மரபில் தோன்றியவர். இளமையிலேயே அந்நகர்

பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப் பெற்றவர். இவர் தேவாரத் திருமுறைகளும், திருத்தொண்டர் வரலாறும் உலகமெலாம் பரவுதல் வேண்டுமென எண்ணிய சோழமன்னன் இராசஇராசனின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டிப் , பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்றுத் தில்லையில் தேவாரத் திருமுறைகளைக் காட்டியருளிய பெருந்தகை. திருமுறைகளைக் காட்டிய அத்திருவாளர் பதினோராம் திருமுறையில் பத்துப் பிரபந்தங்களைப் பாடித் பதினோராம் திருமுறையில் இடம்பெற வைத்தவர். இவரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என சைவப்பெரியார் க. வெள்ளைவாரணம் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

நம்பியாண்டார் நம்பி பாடியருளிய பத்துத் திருப்பதிகங்களுல் ஒன்று திருத்தொண்டர் திருவந்தாதியாகும். தில்லைவாழ் அந்தணர் என்று திருவாரூர்ப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்க, சுந்தரர் பெருமான் திருத்தொண்டத் தொகை என்னும் பதிகத்தைத் திருவாய் மலர்ந்து அருளினார். நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உபதேசித்து அருளியபடி, திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு, தனியடியார் அறுபத்துமூவரையும், திருக்கூட்டத்து அடியார்கள் ஒன்பது கூட்டத்தாரையும், அவர்தம் ஊர், நாடு, மரபு, அவர்கள் மேற்கொண்டு அருளிய திருத்தொண்டு , அவர்கள் பெற்ற பேறு ஆகியவற்றை வகுத்து விளக்கும் நிலையில் , கலித்துறை யாப்பு அமைப்பில் எண்பத்து ஒன்பது பாடல்களாகப் பாடியருளியுள்ளார். அத்துடன் பிரபந்தத்தில் ஒரு பாடல் நம்பியாண்டார் நம்பியைப் போற்றும் பாடலாக அமைந்து இப்பிரபந்தம் தொண்ணூறு பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. சுந்தரர் பதிகத்தில் ஒரு வரியில் அமைந்த திருத்தொண்டர் பெருமை, நம்பியாண்டார் நம்பியின் பிரபந்தத்தில் ஒரு பாடலாகப் பரிணாமம் பெற்றுப் பின்னர், சேக்கிழாரால் வரலாறாகப் பாடப் பெற்றமை தமிழகத்திற்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் புராணமும் சைவ உலகில் பெரும்புகழ் எய்தியது போல, இத்திருத்தொண்டர் திருவந்தாதியும் புகழ்பெற்று உலவ வேண்டும் என்ற ஓசூர்

சிவத்திரு. வை. அறிவானந்தம் அவர்களின் எண்ணப்பாடே இந்நூல் வெளிவருவதாகும். ஓசூர் நகரத்தில் இன்றைய காலக்கட்டத்தில் சைவத்தொண்டு முழுமையாகப் பரவியிருப்பதற்கு அடிப்படையாக அமைந்தவர்களில் சிவத்திரு. வை. அறிவானந்தம் அவர்கள் முதன்மை ஆவார்கள். அவரின் பெற்றோரை எண்ணும் பொழுது உள்ளத்தில் ஒரு பெருமிதம் தோன்றுகிறது. தந்தையார் அமரர் பா. வைத்தியலிங்கம் தாயார் அமரர் சிவத்திரு. சொர்ணாம்பாள் ஆவார்கள். குளித்தலையைச் சார்ந்த திருக்கடம்பந்துறையை ஊராக உடைய அவர்கள், தாங்கள் செய்த தவத்தால் நன்மக்களைப் பெற்று வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். அமரர். பா. வைத்தியலிங்கம் அவர்கள் நூற்றாண்டினைக் கண்டு மகிழ்ந்தவர்கள். அவர்தம் நூற்றாண்டுவிழா ஓசூரில் சமயப் பெருவிழாவாக நடைபெற்றதை எவரும் மறக்க இயலாது!. அப் பெரியார் பெரியபுராண உரையாசிரியர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் ஐயா அவர்களின் பதிப்பிற்கு உடனிருந்து உதவியதோடு, கொடையளித்த வள்ளலும் ஆவார். அவரின் உதவியைத் தன்னுடைய உரைப்பதிப்பில் சிவகவிமணி சுப்பிரமணிய முதலியார் ஐயா அவர்கள் குறித்திருப்பது நினைவுகூரத்தக்கதாகும்.

தில்லைத் திருத்தலத்தில் நடராச பெருமானுக்கு எதிரில் உள்ள கொடிமரத்திற்கு அருகாமையில் திருவாசகம் கோவில் மூத்த திருப்பதிகத்தை கல்வெட்டில் பதித்தும், திருவாலங்காட்டில் பெரியபுராண நிகழ்வுகளைக் கல்வெட்டில் பதித்தும் திருமுறைக்கு தொண்டாற்றிய பெருஞ்செல்வர் ஆவார். அவர்தம் பணியில் முத்தாய்ப்பாய் விளங்குவது தேவார இசைமணி சிவத்திரு தருமபுரம் சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு முதன்முதலாகத் திருவாசகத்தை ஒலிப்பேழையில் பதிவு செய்தமையாகும். திருக்கடம்பந்துறை திருக்கோயில் திருவிழாவில் பத்துநாட்களும் திருமுறை ஓதுவார்களில் முதன்மை பெற்றவர்களைக் கொண்டு, திருமுறைகளை ஓதச் செய்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

திருவாசகத்திலும், பெரியபுராணத்திலும் தன்னை ஆட்படுத்திக் கொண்டு நாளும், அரன் நாமம் கூறி வாழ்ந்த பெரியவர் அவர்.

அவர்தம் நினைவை இந்த உரை வெளியீட்டின் மூலம் போற்றுவது எமது கடமையாகும். அன்னாரின் அருள் வெளிப்பாட்டால் தான் இந்நூல் வெளிவருகிறது என்றால் அது மிகையாகாது!.

தந்தைவழி சிவத்திரு அறிவானந்தம் அவர்கள் தன் தொழிலோடு சைவப்பணியை விடாது, அயராது ஆற்றி வருபவர். திருவாவடுதுறை ஆதீன சித்தாந்த, திருமுறைப் பயிற்சி வகுப்புகளின் மிகச்சிறந்த அமைப்பாளர். வகுப்புகளின் பேராசிரியர்களைத் தாமே அழைத்து வந்து, தமது இல்லத்தில் தங்கவைத்து, வேண்டும் வசதிகளைச் செய்து போற்றும் பெருந்தகையாளர். இந்நூல் வெளியிடும் சிவத்திரு அறிவானந்தம் அவர்களை வாழ்த்தி மகிழ்கின்றோம். எமது எழுபத்தோராம் அகவை நாளில் இவ்வுரையை வெளியிட அருள் புரிந்த முக்கட் பெருமானின் திருவருளைப் போற்றிப் பணிகின்றோம். உரையைக் கணிணி அச்சில் வழக்கம்போல் உருவாக்கிய எம் துணைவியார் மு. அழகம்மை முத்தப்பன் அவர்களுக்கும் , இதனை அச்சிட்டு வெளியிட்ட அச்சகத்தார்க்கும் எம் வாழ்த்துக்கள் உரியதாகும். சைவ அன்பர்கள் இந்த எளிய உரையை ஏற்று எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளைப் பெற்றிடுவார்களாக!.

இவண்,
பழ. முத்தப்பன்.
6, அன்னை சாரதாநகர், சோமரசம் பேட்டை, திருச்சி - 102
அலைபேசி - 9443765027

நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி

தில்லைவாழ் அந்தணர்

செப்பத் தருபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க்(கு) அமுதத் திருநடர்க்(கு) அந்திப் பிறையணிந்த
துப்பர்க்(கு) உரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே. (1)

பொருள்:

அருளாளர்களால் எடுத்துக் கூறும் புகழினைக் கொண்ட, திருத்தில்லைத் தலத்தில் வாழும் நிறைகுணத்தவராகிய அந்தணர்களின் புகழை ஒத்த மூன்று உலகங்களிலும், வானகத்திலும் , உலாவிய முப்புரங்களை எரித்தருளிய முதல்வரும், அமுதம் போன்ற ஆனந்தத்தைத் தரும் திருநடனத்தைச் செய்து அருள்பவரும், மாலைக் காலத்து பிறைச்சந்திரனை அணிந்த பவளம் போன்ற நிறமுடைய சிவபெருமானுக்கு உரிமைத் தொழில் செய்வோருமாகிய, தில்லை மூவாயிரவரை நாம் நாளும் போற்றுவோம்.

சொற் பொருள் விளக்கம்:

பாடலில் இடம்பெற்ற அடியவர் தில்லை மூவாயிரவர். தொண்டு - தில்லை நடராசருக்கு அடிமைத் தொழில் செய்பவர். செப்ப - கூற, செழுமறையோர் - நிறைகுணத்தை உடைய அந்தணர், புவனம் மூன்று - மேல், நடு, பாதாளம், உம்பர் - வானகத்தில் வாழ்வோர்(அரக்கர்), ஊர் - மூன்று கோட்டைகள், அப்பர் - தலைமையானவர், அந்தி - மாலைப்பொழுது, துப்பர் - பவளம் போன்ற மேனியை உடையவர், உரிமைத் தொழில் - அடிமைத் தொழில்.

திருநீலகண்ட நாயனார்

சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்உமை கோன்அருளால்
வில்லைப் புரைநுத லாளோ(டு) இளமைபெற்(று) இன்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனாம் செய்தவனே. (2)

பொருள் :

தன்னுடைய மனைவியின் உடலின்பத்தைத் தான் விரும்பியமையால், அம்மனைவியார் சிவபெருமான் திருஆணையை எடுத்துக் கூற, விரைவாக அம்மனைவியாரின் உடல் இன்பத்தைத் துறந்து, உடம்பு மூப்படைந்த பின் சிவபெருமான் திருவருளால் வில்லைப் போன்ற நெற்றியை உடைய, அம்மனைவியோடு என்றும் நீங்காத இளமையைப் பெற்றுச் சிவ உலகத்தில் இன்பமுற்றவர் யார் என்றால் , தில்லைத் திருத்தலத்தின்கண் அவதரித்த திருநீலகண்டக் குயவர் என்னும் தவமுடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம் பெற்ற அடியவர் - திருநீலகண்டர், ஊர் - தில்லை, தொண்டு - திருவோடு கொடுத்தல். சொல்ல - கூற, சிவன் திரு ஆணை - எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம் என்ற ஆணை, தூமொழி - தூய மொழியை உடைய மனைவியார், தோள் - தோள்களை உடைய உடம்பு, நசை - விருப்பம், ஒல்லை - விரைந்து, உரு - வடிவம், மூத்ததன் பின் - முதுமை அடைந்ததன் பின், உமைகோன் - சிவன், வில்லைப் புரை - வில் போன்ற , நுதல் - நெற்றி,

இயற்பகை நாயனார்.

செய்தவர் வேண்டிய(து) யாதும் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தருக என்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்(து)
எய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே. (3)

பொருள்:

சிவ அடியார்கள் விரும்புகின்ற பொருள்களை மாறாது கொடுத்துவரும் காலத்தில், சிவபெருமான் ஒரு அடியவராய் வேடம் கொண்டு, வஞ்சக வார்த்தைகள் கூறி, உன் மனைவியைக் கொடு என்று கேட்கவும், மை தீட்டப் பெற்ற கண்ணை உடைய தன் மனைவியைக் கொடுத்தவன் யார் என்றால் - பிறர் போற்றுவதற்கு வாய்ப்பான பெரும்புகழைக் கொண்ட காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த இயற்பகை நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம் பெற்ற அடியவர் - இயற்பகை நாயனார், ஊர் - காவிரிப்பூம் பட்டினம், தொண்டு - கேட்டவர் விரும்பியதை மறுக்காது கொடுத்தல். செய்தவர் - தவத்தைச் செய்த அடியார்கள், கொடுப்ப - கொடுத்து வரும் காலத்தில், தவனாய் - தவமுடைய அடியவராய், கைதவம் - வஞ்சகச் சொற்கள், காதலி - மனைவி, மைதிகழ் - மைதீட்டிய, கண்ணி - கண்ணை உடையவள்.

இளையான்குடி மாற நாயனார்.

இயலா விடைச்சென்ற மாதவற்(கு) இன்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்துவாரி மனைஅலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி ஆக்கும் அவன்செழுநீர்க்
கயலார்இளையான் குடியுடை மாறன்எங் கற்பகமே. (4)

பொருள்:

வறுமையுற்ற காலத்தில் தம் இல்லத்திற்கு உணவு விரும்பி வந்த அடியவர்க்கு இனிய உணவாக, வயலில் பகற்பொழுதில் விதைத்த விதை நெல்லை வாரிக்கொண்டு வந்து, வீட்டில் உள்ள கூரை வரிச்சியினால் தீயை உண்டாக்கி வறுத்து, முளைத்த புன்செய்ப் பயிர்களை இன்சுவையுடைய துணைக் கறியாகச் சமைத்தவர் யார் என்றால் - நிறைந்த நீர்நிலையில் கயல் மீன்கள் வாழும் இளையான்குடி என்னும் ஊரையுடைய மாறனார் என்னும் கற்பக மரம் போன்று கொடையுள்ளம் கொண்டு வாழ்ந்தவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியார் - இளையான்குடி மாற நாயனார். ஊர் - இளையான்குடி, தொண்டு - அடியார்க்கு உணவு படைத்தல். இயலாவிடை - வாரி வழங்க இயலாத வறுமைக் காலம், இன்னமுதா - இனிய உணவாக, முளைவித்து - விதைநெல், அலக்கால் - வீட்டுக் கூரையை அமைக்கப் பயன்படும் வரிச்சி என்ற மரக்குச்சி, செயலா - முளைத்த, பயிர் - புன்செய்ப்பயிர் (கீரை), செழுநீர் - நிறைந்த நீர்த்துறை, கயலார் - கயல்மீன்கள்.

மெய்ப்பொருள் நாயனார்.

கற்றநன் மெய்த்தவன் போல்ஒரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லும்திருவாய்
மற்றவன் தத்தா நமரே எனச்சொல்லி வான்உலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாம்என்று பேசுவரே. (5)

பொருள்:

முத்திக்குரிய வேதங்களைக் கற்ற உண்மைத் தவமுடையவன் போலப் பொய் வேடம் கொண்டவன், கொடிய

கோபத்தால் தன்னைக் கொன்ற அவனை (முத்தநாதனை), வாயில் காப்பாளன் கொல்லப் புகுந்த பொழுது, தன் திருவாயினால் அப்பொய்யனை, தத்தா , அவன் நம் சுற்றத்தார் என்று சொல்லித் தடுத்து, சிவபதத்தை அடைந்தவன் யார் என்றால் - சேதிநாட்டுக்கு அரசனாகிய மெய்ப்பொருள் நாயனார் என்று அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - மெய்ப்பொருள் நாயனார், ஊர் - சேதி நன்னாடு, தொண்டு - அரசாட்சி செய்தல். கற்ற - வேதங்களைக் கற்ற, பொய்த்தவன் - பொய் வேடம் கொண்ட முத்தநாதன், காய்சினம் - கொடிய கோபம், செற்றவன் - கொன்றவன், செற - கொல்ல, புகலும் - முற்படும், நமர் - சுற்றத்தார், வானுலகம் - சிவபதம், சேதிபன் - சேதி நன்னாட்டு அரசன், பேசுவர் - அறிஞர் கூறுவர்.

விறன்மிண்ட நாயனார்.

பேசும் பெருமையவ் ஆரூ ரனையும் பிரானவனாம்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம் மேய விறன்மிண்டனே. (6)

பொருள்:

யாவராலும் பேசப் பெறுகின்ற பெருமை கொண்ட நம்பியாரூரரையும், அவரைத் தடுத்தாட் கொண்ட முதல்வராகிய சிவபெருமானையும், அடியார்களுக்குப் புறம்பானவர் என்று கூறியவரும், சிவபெருமானுக்கு அன்பரும் , அடியேனுக்குத் தலைவரும் ஆகியவர் யார் என்றால் - மனையகத்தில் புகுந்து தென்றல் காற்று வீசும் சோலைகள் சூழ்ந்த திருச் செங்குன்றத்தில் அவதரித்த விறன்மிண்ட நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - விறன்மிண்டர், ஊர் - திருச்செங்குன்றம், தொண்டு - இறைவனிடத்தே அன்பு வைத்தல். ஆரூரன் - திருவாரூர் சுந்தரமூர்த்தி நாயனார், பிரானவனாம் - தடுத்தாட் கொண்ட தலைவர், புறகு - புறம்பு, நேசன் - அன்புடையவன், பிரான் - தலைவன், பொழில் - சோலை.

அமர்நீதி நாயனார்.

மிண்டும் பொழில்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டம் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணம்நேர்
கொண்டிங்(கு) அருளென்று தன்பெருஞ் செல்வமும் தன்னையும்தன்
துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழிலினனே. (7)

பொருள்:

நெருங்கிய சோலைகள் சூழ்ந்த பழையாறை என்னும் தலத்தில் அவதரித்த அமர்நீதி நாயனார், வெண்மையான திருநீற்றுத் திரிபுண்டரம் அணிந்த சிவபெருமானுக்கு, திருநல்லூரின் கண் முன்பு நீர்வைத்த கோவணத்திற்குச் சமமாக வாங்கிக் கொண்டு அருள்வீராக என்று, தன் பெருஞ் செல்வத்தையும் தன்னையும், பிறைச்சந்திரன் போன்ற நெற்றியை உடைய தன் மனைவியையும் , நிறுத்துக் கொடுத்த தொழிலை உடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - அமர்நீதி நாயனார், ஊர் - பழையாறை, தொண்டு - கீழுடை (கோவணம்) கொடுத்தல். மிண்டு - நெருங்கி, பொழில் - சோலை, வெண்பொடி - திருநீறு, முண்டம் - மூன்று கோடுகளாக நெற்றியில் அணியும் திருநீற்று வடிவமைப்பு, (திரிபுண்டரம்), துண்டமதி - பிறைச்சந்திரன், நுதலாள் - நெற்றியை உடைய மனைவி,

சுந்தரமூர்த்தி நாயனார்

தொழுதும் வணங்கிய மாலயன் தேடரும் சோதிசென்றாங்(கு)
எழுதும் தமிழ்ப்பழ ஆவணம் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந்(து) ஆட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரின் நற்றார்எம்பி ரான்நம்பி யாரூரனே. (8)

பொருள்:

திருமாலும் பிரமனும் கையால் தொழுதும், வணங்கியும், தேடியும் காணமுடியாத அரிய சிவபெருமான் எழுந்தருளி, தமிழால் எழுதப் பட்ட பழைய அடிமை ஓலையைக் காட்டி, எனக்கு உன் குடியைச் சார்ந்த மூதாதை, தந்தை, நீ முதலியோரும் அடிமை. ஆதலால் எனக்கு நீ ஆட்செய்ய வேண்டும் என்று திருமண நாளில் தடுத்து ஆட் கொள்ளப் பெற்றவர் யார் என்றால் - ஒலிக்கின்ற வண்டுகள் சூழ்ந்திருக்கும் நறுமண மாலை அணிந்த எமது தலைவராகிய நம்பியாரூரர் ஆவார்.

சொ.பொ.வி :

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையில் மொத்தம் 11 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் உள்ள அடியார்களின் செய்தியை நம்பியாண்டார் நம்பி கூறியவுடன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வணக்கம் கூறும் நிலையில் அவரின் வரலாற்றுப் பகுதிகளை மொத்தம் 11 பாடல்களாக இடையிடையே கூறியுள்ளார். அதில் முதல் பாடல் இது. இதில் சுந்தரரை இறைவன் தடுத்தாட் கொண்ட செய்தி கூறப்பெற்றுள்ளது. மாலயன் - திருமால், பிரமன், சோதி - சிவபெருமான், ஆவணம் - ஓலை, முரல்தேன் - வண்டு ஒலிக்கும்.

எறிபத்த நாயனார்.

ஊர்மதில் மூன்றட்ட வுத்தமற்கு என்றோர் உயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகர் உடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு வூரில் எறிபத்தனே. (9)

பொருள்:

வானத்தில் இயங்கிய, முப்புரங்களை எரித்தருளிய சிவபெருமானுக்கு என்று உயர்ந்த தவத்தை உடைய சிவகாமி ஆண்டார் , திருப்பள்ளித் தாமத்திற்குரிய மலரைக் கொய்து, பூக்கூடையில் கொண்டு வரும்பொழுது, தண்டில் மாட்டியிருந்த பூக்கூடையில் இருந்த மலரைப் பறித்த பட்டத்து யானையையும், அதனைச் செலுத்திய பாகரது உடம்பையும் வெட்டியவர் யார் என்றால் - அழகு பொருந்திய பெரிய மதில் சூழ்ந்த திருக்கருவூர் திருத்தலத்தில் வாழ்ந்த எறிபத்த நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - எறிபத்த நாயனார் . ஊர் - திருக்கருவூர், தொண்டு - அடியவர்க்கு உதவுதல். ஊர்மதில் - இயங்குகின்ற கோட்டை, வியத்தவத்தோர் - வியந்த தவத்தை உடைய சிவகாமி ஆண்டார் என்ற அடியவர், கொய்யா - பறித்து, தண்டு - பூக்குடலை மாட்டியிருந்த கம்பு, ஊர்மலை - நடக்கும் மலையாகிய யானை, பாகர் - யானைப்பாகர், துணியாக்கும் - வெட்டும் , ஏர் - அழகு,

ஏனாதிநாத நாயனார்

பத்தனை ஏனாதி நாதனைப் பார்நீ(டு) எயினைதன்னுள்
அத்தனைத் தன்னோ(டு) அமர்மலைந் தான்நெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ(டு) ஒழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை ஈழக் குலதீபன் என்பர்இந் நீணிலத்தே. (10)

பொருள்:

உண்மைப் பத்தியில் சிறந்த ஏனாதி நாயனாரை, நிலவுலகத்தில் உயர்ந்த எயினனூரில் வாழ்ந்த முதல்வராகிய தன்னுடன் போர் செய்த அதிசூரன் நெற்றியில் திருநீற்றைக் கண்டு, தன் கையில் இருந்த ஒப்பற்ற வாட்படையை விடாமல், அவ்வதிசூரன் தன்னை வெட்டும்படி நின்றருளிய அடிகளை , இந்த அகன்ற நிலவுலகத்தில் ஈழக்குலத்துத் தீபம் போன்றவர் என்று சொல்லுவார்கள்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - ஏனாதிநாத நாயனார். ஊர் - எயினனூர், தொண்:டு - அடியவர் வழிபாடு. பத்தன் - உண்மைப் பத்தி உடையவர், பார் - உலகம், எயினை - எயினனூர், அத்தன் - தலைவன், அமர் - போர், நீறு - திருநீறு, தனிவாள் - வாட்படை, வீடு - விழுவது, ஒழிந்தவன் - ஒழித்தவன், கண்டிப்ப - கொல்ல, நித்தன் - அழியாத் தன்மை, ஈழக்குல தீபன் - ஈழக்குலத்துச் சார்ந்தவர்.

கண்ணப்ப நாயனார்

நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி
வலத்தில் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்தப்பினான்
குலத்தின் கிராதன்நம் கண்ணப்ப னாம்என்று கூறுவரே. (11)

பொருள் :

நிலவுலகின் கண் எழுந்தருளி இருக்கும் திருக்காளத்தியப்பரது திருநெற்றியின் கீழ், தம் தொண்டரின் பத்தியை வெளிப்படுத்தும் காரணத்தால், கண்ணிலிருந்து சொரியும்

இரத்தத்தைக் கண்டு , உள்ளத்தில் அச்சமுற்றுக் கூரிய அம்பினால், தன் வலப்பக்கத்தில் உள்ள மலர்போலும் கண்ணைத் தோண்டி எடுத்து அப்பியவர் யார் என்றால் - குலத்தில் வேடுவராகிய நம் கண்ணப்ப நாயனார் என்று அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - கண்ணப்ப நாயனார். ஊர் - திருக்காளத்தி, தொண்டு - திருமேனி வழிபாடு. நிலத்தில் - நிலவுலகத்தில், நெற்றியின்மேல் - நெற்றியின்கீழ் (மேல் என்றது பந்தலின் கீழ் இருந்தானை பந்தல்மேல் இருந்தான் என்று வழங்குவது போல இலக்கண வழக்கு நிலையில் நெற்றியின்கீழ் என்று பொருள் தருகிறது. இதனை இலக்கணை என்பர்) நலத்தை - பத்தியின் நலத்தை, குருதி - இரத்தம், வலத்தில் - வலப் பக்கம், கடுங்கணை - கூர்மையான அம்பு, கிராதன் - வேடன்.

குங்குலியக்கலய நாயனார்

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான்என்பர் காதலி தாலிகொடுத்(து)
ஆய்ந்தநற் குங்குலி யங்கொண்(டு) அனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்(கு)இட்ட தென்கட வூரில் கலயனையே. (12)

பொருள் :

மனைவியின் திருமாங்கல்யத்தைக் கொடுத்து நல்ல குங்குலியத்தை வாங்கிக் கொண்டு , அனலில் உண்டாக்கிய குங்குலியப் புகையை முன் நாளில் மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்த சிவபெருமானுக்கு இட்ட, தெற்கின் கண் உள்ள திருக்கடவூரில் அவதரித்த கலயநாயனாரை, பொலிவுடன் கூடிய பூங்கயிற்றினைத் தன் கழுத்தில் பூட்டி, அழகிய திருப்பனந்தாளில் திருமுடி வளைந்த சிவபெருமானை நேராகச் செய்தவர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - கலயநாயனார். ஊர் - தென் திருக்கடவூர், தொண்டு- இறைவற்குக் குங்குலியப்புகை காட்டுதல். ஏய்ந்த - பொலிவு கொண்ட, கயிறு - பூக்கள்

கட்டப்பெற்ற கயிறு, கண்டம் - கழுத்து, எழில் - அழகு, பனந்தாள் - திருப்பனந்தாள் என்ற ஊர், நிலைத்தான் - நேராகச் செய்தான், காதலி - மனைவி, குங்குலியம் - சாம்பிராணி, காலன் - யமன், அரன் - சிவபெருமான்.

மானக்கஞ்சாற நாயனார்

கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலசும் எனக்கரு தாதவள் கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாறன் எனும்வள்ளலே. (13)

பொருள்:

சிறு கும்பத்தை ஒத்த முலைகளை உடைய, கன்னியாகிய தன்னால் விரும்பப் பட்ட மகளின் , மணம் வீசுகின்ற கூந்தலை நோக்கி , நன்மை மிக்க தவவேடத்தை உடையவராய் எழுந்தருளி வந்த சிவபெருமான், மயிர் பூணூலுக்குக் கூந்தலைக் கொடு என்று கேட்டபொழுது, அப்புதல்வி வருந்துவாள் என்று உள்ளத்தில் நினையாமல் , அவளுடைய கூந்தலை அறுத்துக் கொடுத்தவர் யார் என்றால் - மலையை ஒத்த கோட்டைகள் சூழ்ந்த கஞ்சனூரில் அவதரித்த மானக்கஞ்சாற நாயனார் என்னும் கொடைத் தன்மை உடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியார் - மானக்கஞ்சாற நாயனார், ஊர் - கஞ்சனூர், தொண்டு - கேட்டதைக் கொடுப்பவர். கலசம் - கும்பம், புதல்வி - மகள், குழல் - கூந்தல், பஞ்சவடி - மார்பில் அணிந்து கொள்ளுகின்ற பூணூல், அலசும் - வருந்தும், அரிந்து - அறுத்து, மதில் - கோட்டை, கஞ்சை - கஞ்சனூர், வள்ளல் - கொடையுள்ளம்.

அரிவாட்டாய நாயனார்.

வள்ளற் பிராற்(கு)அமு தேந்தி வருவோன் உகலும்இங்கே
வெள்ளச் சடையாய் அமுதுசெய் யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட் டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்(து)அரி வாட்டாயனே. (14)

பொருள்:

வள்ளல் தன்மை உடைய சிவபெருமானுக்கு, திருவமுதுக்குரிய உணவுப் பொருள்களைத் தலையில் தாங்கிக் கொண்டு வருகின்றவர், உடம்பின் மெலிவால் கால் தவறி , அப்பொருள்கள் நிலத்தின் கமரில் சிந்த, கங்கை சூடிய சடையை உடையவரே, இவற்றை இங்கே திருவமுது செய்யாவிடில், என் தலை அரிவாளால் அறுத்து வீசப்பெறும் என்று , அரிவாளைத் தன் கழுத்தில் மாட்டிய பெருமையுடைய கையைக் கொண்டவர் யார் என்றால் - சேறாக விளங்கும் வயல்கள் சூழ்ந்த கணமங்கலத்தில் அவதரித்த அரிவாயட்டாயர் என்பவராம்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியார் - அரிவாட்டாயர், ஊர் - கணமங்கலம், தொண்டு - இறைவனுக்கு அமுது படைத்தல். பிரான் - சிவபெருமான், அமுது - உணவுப்பொருள், உகலும் - சிந்திய, வெள்ளம் - கங்கை, தள்ள - கீழே தள்ள, வாள் - அரிவாள், அள்ளற் பழனம் - சேற்றோடு கூடிய வயல்.

ஆனாய நாயனார்

தாயவன் யாவுக்கும் தாழ்சடை மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்துதொல் சீர்துளை யால்பரவும்
வேயவன் மேல்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை உவந்தாண்(டு) அருளினனே. (15)

பொருள் :

எல்லா உயிர்களுக்கும் தாயை ஒத்தவனாய், தாழ்ந்த சடைமுடியின் மேல் ஒப்பற்ற பிறைச்சந்திரனைச் சூடிய, தூய்மையான இறைவனது திருவடிகளை மனதால் பற்றி, பழமையான திருநாமமாகிய திருவைந்தெழுத்தைத் துளை வழியாய்ப் போற்றித் துதிக்கும் புல்லாங்குழலை உடையவரும், மழ நாட்டில் விரிந்த நீர் நிலைகள் சூழ்ந்த மழ நாட்டுத் திருமங்கலம் என்னும் திருத்தலத்தில் அவதரித்த, மாடு மேய்க்கும் முதல்வராகிய ஆனாய நாயனார், அடியவனை மகிழ்ச்சியுடன் அடிமையாகக் கொண்டவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - ஆனாய நாயனார், ஊர் - திருமங்கலம், தொண்டு - மாடு மேய்த்துப் புல்லாங்குழல் வாயிலாக ஐந்தெழுத்தை இசைத்தல். யாவுக்கும் - எல்லா உயிர்களுக்கும், தனித்திங்கள் - பிறைச் சந்திரன், பாதம் - திருவடிகள், தொல் - தொன்மையான (பழமையான), சீர் - சிறப்புமிக்க ஐந்தெழுத்து, பரவும் - போற்றும், வேயவன் - மூங்கில் புல்லாங்குழலைக் கொண்டவன், மழநாட்டு - மழ நாடு, புனல் - நீர்நிலை, மங்கலக்கோன் - திருமங்கலத்தில் அவதரித்தவர், ஆயவன் - மாடுமேய்ப்பவன், உவந்து - மகிழ்ந்து,

சுந்தரமூர்த்தி நாயனார்.

அருள்துறை அத்தற்(கு) அடிமைப்பட் டேன்இனி அல்லன்என்னும்
பொருள்துறை யாவதென் னேஎன்ன வல்லவன் பூங்குவளை
இருள்துறை நீர்வயல் நாவற் பதிக்கும் பிரான் அடைந்தோர்
மருள்துறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. (16)

பொருள் :

திருவருள்துறை திருக்கோயிலில் எழுந்தருளும் சிவபெருமானுக்கு ஆட்பட்டேன், இனிமேல் வேறு யார்க்கும் அடிமை அல்லேன் என்று கூறும் நிலைமையாவது எவ்வாறு என்று திருப்பதிகத்தில் ஓதி அருளிய வன்மையுடைய நம்பியாரூரர், அழகிய குவளை மலர்களின் கருமை நிறம் தங்கிய நீர் சூழ்ந்த வயல்களைக் கொண்ட திருநாவலூர்க்கு முதல்வர், தம்மை அடைந்தவர்களது மயக்கத்தை நீக்கி நல்ல முத்திநெறியைக் காட்ட வல்லவர் ஆவார்.

சொ.பொ.வி:

இப்பாடலில் நம்பியாரூரரின் வரலாறாகத் திருவெண்ணெய் நல்லூரில் அமைந்துள்ள, திருவருள்துறை என்னும் பெயர் கொண்ட திருக்கோயில் இறைவனுக்கு அடிமைப் பட்டதும், தலங்கள் தோறும் பதிகம் பாடுவதும், திருநாவலூரில் பிறந்தமையும் கூறப்பட்டுள்ளன. அருள்துறை - திருவருள்துறை, அத்தர் - இறைவன், அல்லேன் - அடிமை அல்லேன், பொருள்துறை -

பொருளமைந்த நிலைமை, என்ன - பதிகம் பாட, இருள்துறை - கருமை நிறம், பிரான் - தலைவன், மருள்துறை - மயக்கம், வான்வழி - முத்திவழி.

மூர்த்தி நாயனார்

அவந்திரி குண்(டு)அமண் ஆவதின் மாள்வனென்(று) அன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல(கு) ஆண்டஒண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னும் நீள்பதியே. (17)

பொருள்:

வீணே திரிகின்ற குண்டர்களாகிய சமணர் ஆவதைக் காட்டிலும், உயிர் விடுவேன் என்று அன்றைக்குத், திருவாலவாயின் கண் உள்ள சிவபெருமானின் திருமேனிக்குச், சிவந்த சந்தனமாகத் தன்னுடைய செழுமை பொருந்திய முழங்கையை , ஒளிவிளங்கும் சந்தனக் கல்லில் மகிழ்வுடன் தேய்த்து, நிலவுலகத்தை அரசாண்ட புகழுடைய மூர்த்தி நாயனாரது ஊர் யாது என்றால் - ஓங்கிய பொன்னால் ஆகிய மாடங்களைக் கொண்ட மதுராபுரி என்று சொல்லும் பெரிய ஊராகும்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - மூர்த்தி நாயனார். ஊர் - மதுராபுரி (மதுரை), தொண்டு - இறைவன் திருமேனிக்குச் சந்தனம் கொடுத்தல். அவந்திரி - வீணாய்த் திரிகின்ற , குண்டு - குண்டர்கள், அமண் - சமணர், ஆவதின் - கொடுங்கோல் அரசன் சந்தன வருவாயைத் தடுத்துச் சமணராக வேண்டும் என்று கேட்டபொழுது, சமணர் ஆவதை விடத் தான் இறப்பதே சிறப்பாகும் என்று எண்ணி, ஆலவாய் - திருஆலவாய்த் தலம், செஞ்சாந்து - இரத்தம் கலந்த சதை, உவந்து - மகிழ்ந்து, பாறை - சந்தனம் தேய்க்கும் கல், ஒண் - பெருமை, நிவந்த - பொன்போன்ற , மதுராபுரி - மதுரை.

முருக நாயனார்.

பதிகம் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியம் சடையாற்கு அலர்தொட்(டு) அணிபவன் யான்மகிழ்ந்து
துதியம் கடற்சண்பை நாதற்குத் தோளன்வன் தொண்டன்அம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு கன்எனும் அந்தணனே. (18)

பொருள் :

ஆளுடைப்பிள்ளையார் திருப்பதிகத்தில் அருளிய திருவைந்தெழுத்தை நாளும் கூறும் நாவை உடையவரும், சிறப்புடன் கூடிய பிறைச்சந்திரனைக் கொண்ட சடைமுடியை உடைய சிவபெருமானுக்கு, மலர் மாலையை நாள்தோறும் அணிவிக்கும் முறைமை உடையவரும் , நான் மகிழ்ந்து நாள்தோறும் துதிசெயும் திருவடிகளை உடைய ஆளுடைப் பிள்ளையாராம் திருஞான சம்பந்தருக்கு நட்பினரும் ஆவார் யார் என்றால் - நம்பியாரூரர் பொன்னை அதிகம் பெற்றுக் கொண்ட, திருப்புகலூர்த் திருத்தலத்தில் அவதரித்த முருகநாயனார் என்னும் அந்தணர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - முருக நாயனார். ஊர் - திருப்புகலூர், தொண்டு - இறைவன் திருமேனிக்கு மலர் மாலை அணிவித்தல். பதிகம் - ஞானசம்பந்தரின் பதிகங்கள், பஞ்சாக்கரம் - திருவைந்தெழுத்து, அலர்தொட்டு - மாலை தொடுத்து, துதியம் - துதிக்கும், சண்பைநாதர் - சண்பைநகரில் எழுந்தருளியிருக்கும் இறைவர், (சீர்காழிக்கு மற்றொரு பெயர்) தோழன் - நட்பினன், அம்பொன் - அழகிய பொன்.

உருத்திர பசுபதி நாயனார்

அந்தாழ் புனல்தன்னில் அல்லும் பகலும்நின்(று) ஆதரத்தால்
உந்தாத அன்பொ(டு) உருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூர்என்(று) உரைப்பர்இந் நானிலத்தே. (19)

பொருள்:

அழகுடைய ஆழ்ந்த நீர்நிறைந்த குளத்தில் , இரவும் பகலும் ஓதும் காலம் தவறாமல் விருப்பொடு நின்று , வழுவாத பேரன்பால் உருத்திரத்தை ஓதி மனம் ஒருப்பட்ட , தாமரை மாலையை உடைய உருத்திர பசுபதி நாயானரின் நல்ல ஊர் யாது என்றால் - வயலிடத்தே சங்குகள் அதிகமாகத் தங்கும் திருத்தலையூர் என்று விரிந்த இந்த நிலவுலகத்து அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - உருத்திர பசுபதி நாயனார். ஊர் - திருத்தலையூர், தொண்டு - குளத்தில் நின்று உருத்திரம் என்ற மந்திரத்தை இரவு பகல் தவறாது ஓதுதல், அம்தாள்- அழகிய ஆழ்ந்த, புனல் - குளம், அல்லும் - இரவும், ஆதரத்தால் - விருப்பத்துடன், உந்தாத - வழுவாத, உருத்திரம் - ருத்ர மந்திரம் , பதி - ஊர், நந்து - சங்கு, நானிலம் - உலகத்து அறிஞர்.

திருநாளைப்போவார் நாயனார்.

நாவார் புகழ்தில்லை அம்பலத்தான்அருள் பெற்றுநாளைப்
போவான் அவனாம் புறத்திருத் தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியா அவன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பர்இம் மண்டலத்தே. (20)

பொருள் :

அறிஞர்கள் தம் நாவினால் துதிக்கும் புகழைக் கொண்ட, தில்லைத் திருநகரின் கண் உள்ள நடராசரின் திருவருளைப் பெற, நாளைப் போவேன் என்று கூறிக் கொண்டிருந்த திருநாளைப் போவார், தன் சிறுமையான குலத்தன்மை நீங்கி, தில்லை மூவாயிரவர்கள் கைகூப்பி வணங்க, அந்தண முனிவரான திருநாளைப் போவார் என்னும் தொண்டரின் ஊராவது யாது என்றால் - வண்டுகள் ஒலிக்கின்ற சோலை சூழ்ந்த ஆதனூர் என்று இந் நிலவுலகத்து அறிஞர் கூறுவர்.

சொ.பொ. வி:

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருநாளைப்போவார். ஊர் - ஆதனூர், தொண்டு - புலையர் தொழில், (குளம் வெட்டுதல் போன்றவை) நாவார் - நாவினால், பெற்று - பெற, அவனாம் - திருநாளைப் போவாராம் அவன், புன்புலை - தீண்டத் தகாத புலைத்தொழில் மரபு , மூவாயிரவர் - தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவர், முனியா - அந்தண முனிவராய், மா - வண்டு, ஆர் - ஒலிக்கும், மண்டலம் - நிலவுலகத்து அறிஞர்.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

மண்டும் புனற்சடை யான்தமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடாது ஒழியின்யான் வீவன்என்னா
மிண்டும் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத் தொண்டன்
குலங்கச்சி ஏகா தியர்தங்கள் தொல்குலமே. (21)

பொருள்:

கங்கைநீர் நிறைந்த சடையையுடைய சிவபெருமானது அடியவர்களின் கந்தையைக், கல்லில் அடித்து அழுக்கு நீக்கி உலர்த்திக் கொடுக்கும் வகையில் , ஒருநாள் மேகங்கள் பொழியும் மழை விடாது பொழிந்ததால் (காய் வைத்துக் கொடுக்க முடியாமையால்)யான் உயிர் விடுவேன் என்று நெருங்கியிருக்கும் பெரிய துவைக்கும் கல்லில், தன் தலையை மோதும் அழகிய திருக்குறிப்புத் தொண்டரின் குலம் எது என்றால் - காஞ்சி நகரத்தின்கண் உள்ள வண்ணார்களின் பழைய குலமாகும்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருக்குறிப்புத் தொண்டர், ஊர் - கச்சி(காஞ்சீபுரம்), தொண்டு - அடியவரின் கந்தையைத் துவைத்துக் கொடுக்கும் ஏகாதியர் தொண்டு. மண்டும் - நிறைந்த, தமர் - சுற்றத்தார் (அடியவர்) தூசு - அழுக்கு, எற்றி - அடித்து, வாட்டும் - ஈரம் உணர்த்தி, விண்டு - மிகுதி, வீவன் - இறப்பேன், மிண்டும் - வலிமையான, பாறை - துவைக்கும் கல், ஏகாதியர் - வண்ணார்.

சண்டேசுர நாயனார்

குலமே றியசேய்ஞ லூரில் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறல் சண்டிகண் டீர்தந்தை தாள்இரண்டும்
வலமே றியமழு வால்எறிந்(து) ஈசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே. (22)

பொருள்:

உயர்குலத்து அந்தணர்கள் வாழுகின்ற திருச்சேய்ஞ்ஞலூரில் அவதரித்த முதல்வர், தம் தந்தையின் கால்கள் இரண்டையும், வெற்றி பொருந்திய மழுவாயுதத்தால் வெட்டி, சிவபெருமான் திருமுடியின் மேல் நல்ல ஆவின் பாலைத் திருமஞ்சனமாட்டி, மலர்கள் தூவி வழிபட்ட நல்ல நிதி போன்றவர், ஒலிக்கும் கடல் சூழ்ந்த நிலவுகலத்தில் விளங்கும் பத்தி வலிமையுடைய சண்டேசுர நாயனார் என்று அறிஞர்களே அறிந்து கொள்ளுங்கள்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - சண்டேசுவர நாயனார், ஊர் - சேய்ஞ்ஞலூர், தொண்டு - இறைவன் திருமேனியை வழிபடல். குலம் - அந்தணர்குலம், குரிசில் - தலைவர், குரை - ஒலிக்கும், விறல் - விளங்கும், கண்டீர் - அறிந்து கொள்க, தாள் - கால், வலம் - வெற்றி, மழு - ஆயுதம், நிதி - செல்வம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற்(கு) அறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடு என்று
துதியா அருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர் கோன்என்னும் நற்றவனே. (23)

பொருள்:

செல்வம் நிறைந்த திருத்துருத்தியிலும், தெற்குத் திசையில் உள்ள திருவேள்விக்குடியிலும் பகல் இரவில் முறையே வாழும் முதல்வரே, உம்மை மறந்த புத்தியை உடைய எனக்கு, உம்மை அறியும் குறிப்பை முன்னே அருளி, பின் என் உடம்பில் உள்ள நோயை நீக்கு என்று துதித்து, அவ்விரு தலத்திலும் ஒருவராய்

வீற்றிருக்கும் சொன்னவாறு அறிவார், என்னும் சிவபெருமானிடத்தில் அருள் பெற்றவர் யார் என்றால் - ஆற்றுநீர் பாய்கின்ற வயல்சூழ்ந்த திருநாவலூரர் என்னும் நல்ல தவத்தை உடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

இப்பாடலில் சுந்தரமூர்த்தி நாயனார் இழந்த கண்ணைத் திரும்பப் பெறத் திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும் எழுந்தருளிய இறைவனிடத்தில் வேண்டி, நோய் நீங்கித் திருவருள் பெற்ற வரலாறு கூறப் பெற்றுள்ளது. நிதி - செல்வம், துருத்தி - திருத்துருத்தி என்ற தலம், தென்வேள்விக்குடி - தென்திசையில் உள்ள வேள்விக்குடி, அறிகுறி - அறியும் குறியை, புகர் - பிணியால் உடம்பில் காணும் தளர்ச்சி (கண் இழந்த நிலை), சொன்னவாறு அறிவார் - வேண்டிக் கொண்டவாறு நோய் நீங்கப் பெற்ற திருவருள், நதியார் - ஆற்றுநீர்.

திருநாவுக்கரசு நாயனார்.

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதம்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றுஇப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடம்அடை யார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்க கரசெனும் தூமணியே. (24)

பொருள்:

நல்ல தவத்தினை உடையவரும், திருநல்லூரில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளைத் தன் தலையில் சூட்டி அருளப் பெற்றவரும், இவையன்றி இப்பிறவி நீங்கும்படி வீரட்டான ஈசனது வீரக்கழல் அணிந்த திருவடியைப் புகலிடமாக அடைந்தவரும், அமுதோடு கலந்த நஞ்சைச் சமணர்கள் கொடுக்க, அதனைத் திருவமுதாக உண்டவரும் யார் என்றால் - திருவாமூரின்கண் அவதரித்த திருநாவுக்கரசு என்னும் தூய மணி போன்றவராவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருநாவுக்கரசு நாயனார். ஊர் - திருவாமூர், தொண்டு - இறைவன் திருவுருவைப் போற்றுதல்.

நற்றவன் - நல்ல தவத்தை உடையவன், சென்னி -- தலை, வைக்க - சூட்ட, வீரட்டர் - வீர்ட்டானேசுவரர், பெய்கழல் - வீரக்கழல் அணிந்த, விடம் - வி'ம், அடையார் - பகைவர்(சமணர்) அமுதம் -உணவு.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கள்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர் பிரான்தன் அருந்தமிழே. (25)

பொருள்:

திருநாவுக்கரசரின் அரிய திருப்பதிகங்கள் , சிந்தாமணி போலும் திருமறைக்காட்டின் கண் எழுந்தருளி அருளும், பிறவி நோய்க்கு மருந்தாக உள்ள சிவபெருமான் மூலம் , வளமுடைய சொன்நயத்தால் வலிமை மிக்க நீண்ட கதவைத் திறக்கச் செய்வித்தன. தெளிந்த கடலிடத்துப் பிணிக்கப் பெற்ற கல்லை மிதக்கச் செய்தன. சைவ சமயமாகிய நெறிக்கு அலங்காரமாய் உள்ளன.

சொ.பொ.வி :

இதுவும் திருநாவுக்கரசரைப் பற்றிய பாடலே. மணி - சிந்தாமணி, மாமறைக்காட்டு - திருமறைக்காட்டு(வேதாரண்யம்), மருந்தினை - பிறவி நோய்க்குரிய மருந்து, வண்மொழியால் - வலிமையான சொல் நயத்தால். திணி - வலிமை, நீள்கதவம் - நீண்ட கதவு:, தென்கடல் - தெளிந்த நீரை உடைய கடல், பிணி - கட்டப்பெற்ற, அணி - அழகு ,அருந்தமிழ் - அரிய பதிகங்கள்.

குலச்சிறை நாயனார்

அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித்தோன்எழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்அதி காரி பிரசம்மல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே. (26)

பொருள்:

தமிழாகரர் எனப் பெருமை பெற்ற ஞானசம்பந்தரிடம், போட்டியில் தோற்ற சமணர்களைப் பாண்டிய நாட்டின்கண் கழுவில் ஏற்றுவித்தவரும், அழகிய தமிழ்ச் சங்கத்தைத் தோற்றி வைத்த பெருமையுடைய தமிழை உணர்ந்த பாண்டியன் மந்திரியும் யார் என்றால் - தேன் நிறைந்த குருந்தமரங்கள் மலர்ந்திருக்கும் நெய்தல் நிலத்து மணமேற்குடியில் அவதரித்த தலைவராகிய குலச்சிறையார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - குலச்சிறை நாயனார். ஊர் - மணமேற்குடி, தொண்டு - பாண்டிய அமைச்சர். தமிழாகரர் - திருஞானசம்பந்தரின் பட்டம், வாதில் - விவாதத்தில் (போட்டியில்), அமணை - சமணர்களை, கழுநுதி - கழுவின்நுனி, அருந்தமிழ்நாடு - பாண்டியநாடு, மீனவன் - பாண்டியன். பிரசம் - தேன், சாரல் - நெய்தல் நிலம்.

பெருமிழலைக்குறும்ப நாயனார்

சிறைநன் புனல்திரு நாவலூர் ஆளி செழுங்கயிலைக்(கு)
இறைநன் கழல்நாளை எய்தும் இவனருள் போற்றஇன்றே
பிறைநன் முடியன் அடியடை வேன்என்(று) உடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனும்நம்பியே. (27)

பொருள்:

கரையோடு கூடிய நல்ல நீர் சூழ்ந்த திருநாவலூரர் (சுந்தரர்) செழுமையான கயிலை மலைக்கு முதல்வராகிய சிவபெருமானுடைய திருவடிகளை , நாளைய தினம் அடைவார் என்பதால் , இந்நாவலூராரது திருவருளைப் போற்ற, நல்ல பிறை அணிந்த திருமுடியை உடைய சிவபெருமானின் திருவருளை இன்றைக்கே அடைவேன் என்று , உடம்பை விட்டுச் சென்றார் யார் என்றால் - நறுமணம் மிக்க நல்ல மலர்மாலை அணிந்த பெருமிழலைக் குறும்பன் எனும் பெருமையில் சிறந்தோர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - பெருமிழலைக் குறும்பர், ஊர் - பெருமிழலை, தொண்டு - சுந்தரரையே தெய்வமாக எண்ணிப்

போற்றியவர். சிறை - நீர்க்கரை, ஆளி - சிங்கம், நன்கழல் - திருவடி, இவனருள் - சுந்தரரின் அருள், பிறை - பிறைச்சந்திரன், நறை - நன்மணம், தார் - மாலை,

காரைக்கால் அம்மையார்

நம்பன் திருமலை நான்மிதி யேன்என்று தாள்இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்(து) ஏற உமைநகலும்
செம்பொன் உருவன்என் அம்மை எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பின் உகுகாரைக் காலினில் மேய குலதனமே. (28)

பொருள்:

சிவபிரான் வீற்றிருந்து அருளும் கயிலை மலையை நான் மிதிக்க மாட்டேன் என்று, தன் இரண்டு திருவடிகளும் மேலாக இருக்கத் தலையால் நடந்து செல்ல - (அதனைக்கண்ட)உமையவள் நகைசெய்யவும், அப்பொழுது சிவந்த பொன்போலும் திருமேனியை உடைய சிவபெருமானால், என் அம்மையே என்று அழைக்கப் பெற்றவர் யார் என்றால் - மரக்கொம்பிலிருந்து செழுமையான தேன் சிந்தும் காரைக்கால் என்னும் ஊரில் அவதரித்த வணிகர் குலத்திற்கு ஒரு முதல் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - காரைக்கால் அம்மையார், ஊர் - காரைக்கால், தொண்டு - சிவனையே வழிபடுதல். நம்பன் - சிவபெருமான், உம்பர்மிசை - மேலே இருக்க, ஏற - மலைமீது ஏற , உமை - உமையவள், நகலும் - சிரிக்க, செம்பொன் உருவன் - சிவந்த மேனியை உடைய சிவபெருமான், எனப்பெற்றவள் - என அழைக்கப் பெற்றவள், செழுந்தேன் - செழுமையான தேன், கொம்பு - மலர்க்கொம்பு, குல - வணிகர்குலம், தனம் - செல்வம்.(முதல்)

அப்பூதி அடிகள் நாயனார்

தனமா வதுதிரு நாவுக்(கு) அரசின் சரணம்என்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத்(து) ஆங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல்திங்கள் ஊரினில் வேதியன் அப்பூதியே. (29)

பொருள்:

எமக்குச் செல்வமாவது திருநாவுக்கரசரின் திருவடிகளே என்று, கண்டார் மனதிற்கு நிறைவாக அமைந்த தண்ணீர்ப் பந்தலைப் போற்றி வைத்து, திருநாவுக்கரசரின் திருப்பதிகத்தில் தனது திருப்பெயரை இடம்பெற வைத்துப் பாடப்பெற்ற சிறப்பினை உடையவர் யார் என்றால் - எங்கள் தலைவனாகிய அன்னங்கள் உலாவும் வயல்களை உடைய திங்களூரில் தோன்றிய அந்தணராகிய அப்பூதி அடிகள் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - அப்பூதி அடிகள் நாயனார், ஊர் - திங்களூர், தொண்டு - தண்ணீர்ப் பந்தல் வைத்தல். தனம் - செல்வம், சரணம் - திருவடிகள், மனமார் - மனம்நிறையும், புனற்பந்தர் - தண்ணீர்ப் பந்தர், ஆங்கவன் - திருநாவுக்கரசர், வண்தமிழ் - பதிகப் பாடல், தனது பெயரிட - தனது பெயர் இடம்பெற, அனமார் - அன்னங்கள் உலாவும். வேதியன் - அந்தணர்.

திருநீலநக்க நாயனார்

பூதிப் புயத்தர் புயத்தில் சிலந்தி புகலும்அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்பஉப் பாலவெல்லாம்
பேதித்(து) எழுந்தன காணென்று பிஞ்ஞுகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக் கன்எனும் வேதியனே. (30)

பொருள்:

திருநீறு அணிந்த திருப்புயங்களை உடைய சிவபெருமானின் திருத்தோளில் சிலந்திப் பூச்சியானது விழ, அதனால் அஞ்சி வாயால் ஊதி எச்சில் உமிழ்ந்த தன் மனையாளை விலக்க- ஊதி உமிழாத இடமெல்லாம் சிலந்தியின் விஷ வேகத்தால் கொப்புளங்கள் எழுந்ததை நீ காண்பாயாக என்று, சிவபெருமானால் காட்டப்பெற்ற பெருமை உடையவர் யார் என்றால் - வேதநீதி ஒழுங்கமைந்த சாத்தனூர் என்னும் ஊரில் வாழ்ந்த திருநீல நக்கனார் என்னும் அந்தணர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருநீலநக்க நாயனார். ஊர் - சாத்தனூர், தொண்டு - திருக்கோயில் பூசைப்பணி. பூதி - விபூதி (திருநீறு), புயத்தர் - தோள்களை உடையவர், புயத்தில் - தோளில், சிலந்தி - ஒருவகை விஷப்பூச்சி, ஊதித்துமிந்த - வாயால் ஊதி எச்சிலை உமிழ்ந்த, நீப்ப - விலக்க, உப்பால் - அல்லாத இடம், பேதித்து எழுந்தன - கொப்புளங்கள் எழுந்தன. பிஞ்ஞகன் - இறைவன், நீதி - வேதநீதி, வேதியன் - அந்தணன்.

நமிநந்தியடிகள் நாயனார்

வேத மறிக்கரத் தாரூர் அரற்கு விளக்குநெய்யைத்
தீது செறிஅமண் கையர்அட் டாவிடத்(து) தண்புனலால்
ஏத முறுக வருகரென்(று) அன்று விளக்கெரித்தான்
நாதன் எழில்ஏமப் பேறூர் அதிபன் நமிநந்தியே. (31)

பொருள்:

வேத வடிவான மான் கன்றை ஏந்திய திருக்கரத்தை உடைய, திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு, திருவிளக்கு இடுவதற்கு உரிய நெய்யைக் குற்றம் நிறைந்த சமணர்களாகிய இழிந்தவர்கள் தராது ஒழிய, தெளிந்த நீரினால் சமணர்கள் கலங்க அந்நாளில் திருவிளக்கு ஏற்றியவர் யார் என்றால் - எமக்கு முதல்வரும், ஏமப்பேறூர் என்ற ஊருக்குத் தலைவரும் ஆகிய நமிநந்தியடிகள் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - நமிநந்தியடிகள் நாயனார், ஊர் - ஏமப்பேறூர், தொண்டு - திருக்கோயிலில் விளக்கேற்றும் பணி. மறி - மான், ஆரூர்அரன் - திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன், நெய் - விளக்கெரிக்கும் நெய், தீதுசெறி - குற்றம் புரியும், அமண்கையர் - சமணர்கள், அட்டாவிடத்து - தராதவிடத்து, தண்புனல் - குளிர்ச்சி பொருந்திய நீர், ஏதமுறுக - துன்பமடைய, நாதன் - முதல்வன், அதிபன் - தலைவன்.

சுந்தரமூர்த்தி நாயனார்

நந்திக்கு நம்பெரு மாற்குநல் ஆரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்தொண்டன் என்பர்இவ் வையகத்தே. (32)

பொருள் :

திருவாரூரில் வீற்றிருந்து அருளும் முதல்வரும், நந்தி எனும் திருப் பெயரை உடையவருமாகிய சிவபெருமானுக்கு, பரவிய நீர் ஒழுக்குப் போல, செய்யுட் குற்றம் இல்லாத செந்தமிழ்த் திருப்பதிகங்களைப் பாடுவதற்கு, சிந்திப்பதற்கு அரிய திருவருளைப் பெற்றுச், சிவபெருமான் திருவடிகளையே வழிபாடு செய்பவரின் திருப்பெயர் வன்தொண்டன் என்று, இந்நிலவுலகத்தில் உள்ள அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

படர் புனலில் என்ற தொடர் - சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றில் பொன்னை இட்டுக் குளத்தில் பெற்ற வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகிறது. மேலும் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் இருந்தோர் அவரை வன்தொண்டர் என்று அழைத்த செய்தியும் இடம்பெற்றுள்ளது. நந்தி - இறைவனுடைய பெயர், பந்திப் பரியன - நீர் ஒழுக்குப் போல் , செந்தமிழ் - குற்றமில்லாத தமிழ்ப் பதிகம், படர்புனலில் சேவடி பெற்றவன் - நீரில் திருவருள் பெற்றவர், வந்திப்பவன் - வழிபாடு செய்பவன்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

வையம் மகிழயாம் வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற்(கு) அம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனன்என்பர் ஞானசம் பந்தனையே. (33)

பொருள்:

திருஞான சம்பந்தரை, உலகத்தார் மகிழ்ச்சி அடையவும்,

நாம் அனைவரும் வாழவும், சமணர்களுடைய கொள்கை வலிகெடவும் - எமது முதல்வராகிய பிரமபுரத்தில் வீற்றிருந்து அருளும் தோணிபுரத்து இறைவனுக்கு, அழகிய மென்மையான மழலை வார்த்தையைத் தன் சிவந்த திருவாயினால் மெல்லப் பேசும் மூன்று வயதில் பாடலாகப் பாடும்படிக்கு, கயிலை மலையின் உமாதேவியாரது திருவருளைப் பெற்றார் என்று கூறுவர்.

சொ.பொ.வி :

இப்பாடலில் இடம்பெறும் அடியார் -திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், ஊர் - பிரமபுரம் (சீர்காழிக்கு மற்றொரு பெயர்) தொண்டு - இறைவன் மீது பதிகம் பாடுதல். வையம் - உலகம், யாம் - நாம், அமணர் - சமணர், அம் மென் - அழகிய மென்மையான, குதலை - மழலை, பருவம் - மூன்றாண்டு, பருப்பதம் - கயிலாயம், தையல் - உமையவள்.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தார் அகலத்து நீலநக்கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான்அருட் காழியர் கொற்றவனே. (34)

பொருள்:

மங்கையர்க்கரசியார் , குலச்சிறையார் , கோச்செங்கட் சோழர், முருக நாயனார், நல்ல சந்தனக் குழம்பு அணிந்த மார்பினை உடைய திருநீல நக்கர் ஆகிய இவர்களின் பெயர்களைப் புகழ்ந்து, மலர்க்கொத்துக்கள் பூண்ட சடையை உடைய சிவபெருமானின் திருப்பதிகங்களில் ஓதி, அடியேன் அளித்த அந்தாதி என்னும் பாமாலையைச் சூடிக்கொண்டு அருளுகின்ற முதல்வர் யார் என்றால் - இறையருள் பெற்ற ஆளுடைப் பிள்ளையார் ஆவார்.

சொ.பொ.வி :

பந்தார் விரலியர் - மங்கையர்க்கரசியார், வேள் - குலச்சிறையார், நீலநக்கன் - திருநீலநக்கர், தான்மொழிந்து - இவர்களின் பெயர்களைத் தான் பாடுகின்ற பதிகத்தில் இடம்பெற

வைத்தார், கொத்தார் -பூங்கொத்து, அடியேன் -நம்பியாண்டார் நம்பி, அந்தாதி - திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் இந்நூல், காழியர் - சீர்காழியில் தோன்றிய ஞானசம்பந்தர்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார்

கொற்றத் திறல்எந்தை தந்தைதன் தந்தைஎங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி யேம்திகழ் வன்தொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பான்என்(று) உடைவாள் உருவிஅந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே. (35)

பொருள்:

வெற்றி மிக்க வலிமை கொண்ட என் தந்தை, அவரின் தந்தை, ஆகிய எமது மூன்று தலைமுறையினர் அனைவரும் நெருங்கிய சடையினை உடையவரே, உமக்கு அடிமைகளாக நடக்கின்றோம். ஆனால் உன்னை நடக்க வைத்த வன்தொண்டன் இந்நோயை நீக்குவானோ என்று, உடைவாளை உறையில் இருந்து கழித்து, தன்னுயிர் போக்கிச் சூலைநோயை நீக்கிய கலிக்காமரின் குடி யாது என்றால் - ஏயர்கோன் குடியாகும்.

சொ.பொ.வி:

பாடலில் இடம்பெற்ற அடியார் - ஏயர்கோன் கலிக்காம நாயனார். ஊர் - திருவாரூர், தொண்டு - சிவவழிபாடு. கொற்றத்திறல் - வெற்றியுடைய வலிமை, எந்தை தந்தைதன் தந்தை - தாத்தா, தெற்றச் சடையாய் - நெருங்கிய சடை, பிணி - சூலைநோய், செற்று - நீக்கி,

திருமூல நாயனார்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மெய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே. (36)

பொருள்:

உயர்ந்த குடிகள் நிலைபெற்று வாழும் சாத்தனூரின் கண் உள்ள, பசுக்கூட்டங்களை மேய்க்கும் இடையனது உடலில்

புகுந்து, திருமுடியில் பிறைச்சந்திரனை உடைய சிவபெருமானை, நிறைந்த தமிழில் அமைந்த மந்திர மொழியால் துதித்து, என் தலையின்கண் தன் திருவடிகளை எந்த நாளும் நிலைபெற வைத்தவர் யார் என்றால் - திருமூல நாயனார் என்னும் பெருங்கருணை உடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருமூல நாயனார். ஊர் - சாத்தனூர், தொண்டு - திருமந்திரம் பாடியது. குடிமன்னு - நிலைபெற்ற உயர்ந்த குலம், கோக்குலம் - பசுக்கூட்டம், குரம்பை - உடம்பு, கூனல்பிறை - பிறைச் சந்திரன், முழுத்தமிழ் - நிறைந்த தமிழ், படிமன்னு வேதத்தின் சொற்படி - வேத ஆகமங்கள் கூறும் வழியாக, பரவி - போற்றி, என்உச்சி - என்தலை.

தண்டியடிகள் நாயனார்

கண்ணார் மணிஒன்றும் இன்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனல்தடம் தொட்டலும் தன்னை நகும்அமணர்
கண்ணாங்(கு) இழப்ப அமணர் கலக்கங்கண்(டு) அம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறல்தண்டியே. (37)

பொருள்:

கண்ணில் உள்ள கருமணி இல்லாமல் , குளத்தில் கம்பு நட்டு அதில் கட்டிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு , சிவபெருமானுக்குக் குளிர்ந்த நீரை உடைய, குளம் ஒன்றை எடுக்கவும், அதுகண்டு தன்னைக் குருடன் என்று இகழ்ந்த சமணர்கள் அந்த இடத்திலேயே கண் இழந்து போக, அவர்களைக் கலங்கச் செய்து மலர்போலும் கண்ணைத் தனக்குச் சிவபெருமானிடத்தில் பெற்றுக் கொண்டவர் யார் என்றால் - திருவாரூரில் அவதரித்த வலிமை கொண்ட பத்தியுடைய தண்டியடிகள் ஆவார்.

சொ.பொ.வி:

பாடலில் இடம்பெற்ற அடியார் - தண்டியடிகள் நாயனார். ஊர் - திருவாரூர், தொண்டு - குளம் வெட்டும் பணி. மணிஒன்றும்

இன்றி - கண்ணில் உள்ள கருமணி இல்லாமல், கயிறு பிடித்து - குளத்தில் நடப்பட்ட கம்பில் கட்டிய கயிற்றைப் பிடித்து, புனல் தடம் - நீர் நிறைந்த குளம், தொட்டலும் - தோண்டலும், அமணர் - சமணர், அம்மலர்க்கண் - அழகிய மலர்போன்ற கண், விண்ணாயகன் - இறைவன், ஆரூர் - திருவாரூர்.

மூர்க்க நாயனார்.

தண்டலை சூழ்திரு வேற்காட்டூர் மன்னன் தருகவற்றால்
கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்டபொருள்
முண்டநன் னீற்றன் அடியவர்க்(கு) ஈபவன் மூர்க்கனென்பர்
தண்டலை நீரொண் குடந்தையில் மேவுநற் சூதனையே. (38)

பொருள் :

சோலைகள் சூழ்ந்த திருவேற்காடு என்னும் திருத்தலத்தில் அவதரித்த முதல்வரும் , சூதாடுவதற்குத் தக்க நிலையில் அமைத்த வல்லுப் பலகை உள்ள இடத்தில், சூதாடுபவர்களை வெற்றி கொண்டு, தான் கொண்ட பொருளைத் திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிந்த அடியார்களுக்குக் கொடுக்கின்றவரும், நண்டுகள் உலவுகின்ற நீர்வளம் பொருந்திய குடந்தை நகரில் நல்ல சூதாட்டத்தில் வல்லவரும் ஆகியவர் யார் என்றால் - மூர்க்க நாயனார் என்று கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - மூர்க்க நாயனார். ஊர் - திருவேற்காடு, தொண்டு - சூதாட்டத்தில் வரும் பொருளைச் சிவனடியார்களுக்குக் கொடுத்தல். தண்டலை - சோலை, மன்னன் - தலைவன், கவறு - சூதாடுதல், வல்லாயம் - சூதாடுமிடம், முண்ட நன்னீறு - திரிபுண்டரமாகத் திருநீற்றை அணிந்தவர், குடந்தை - கும்பகோணம், சூது - சூதாட்டம்.

சோமாசிமாற நாயனார்.

சூதப் பொழில் அம்பர் அந்தணன் சோமாசி மாறன்என்பான்
வேதப் பொருள்அஞ் செழுத்தும் விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன்வன் தொண்டன் தனக்கு மகிழ்துணையே.(39)

பொருள்:

மாமரங்கள் மிகுந்த , சோலைகள் சூழ்ந்த திருஅம்பர் என்னும் திருத்தலத்தில் அவதரித்த, அந்தணராகிய சோமாசிமாற நாயனார் என்று கூறப்பெறுபவர் - வேதத்தின் பொருளாகிய திருவைந்தெழுத்தை ஓதுவது அன்றிப் பிற வார்த்தைகள் சொல்லாதவரும், ஒழுக்கத்தில் சிறந்தவரும் , எப்பொழுதும் யாகம் முதலிய நியமங்களைச் செய்பவரும், பரவையின் கணவராகிய நம்பியாரூரருக்கு நண்பரும் ஆவார்.

சொ.பொ. வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - சோமாசிமாற நாயனார். ஊர் - திருவம்பர், தொண்டு - நாளும் வேள்வி செய்வதுடன் சுந்தரரைப் போற்றி வாழும் தொண்டு. சூதப்பொழில் - மாமரம் சூழ்ந்த சோலை, அம்பர் - திருவம்பர், மொழியான் - பிறசொல் சொல்லான், நீதிப்பரன் - ஒழுக்கம் உடையவன், நித்த நியமன் - தினமும் வேள்வி செய்பவன், காந்தன் - கணவன், மகிழ்துணை - மகிழ்வோடு கூடிய நட்பினன்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

துணையும் அளவும்இல் லாதவன் தன்னரு ளேதுணையாக்
கணையும் கதிர்நெடு வேலும் கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்த சங்கிலி பேரமைத் தோள்இரண்டும்
அணையும் அவன்திரு ஆரூரன் ஆகின்ற அற்புதனே. (40)

பொருள்:

ஒப்பும் உயர்வும் இல்லாத சிவபெருமான் திருவருள் துணையாக, அம்பு ,நீண்ட வேல், கருமையான கயல்மீன், மானின் பார்வை ஆகியவற்றை ஒத்த கண்களைக் கொண்ட சங்கிலி நாச்சியாரது, பெரிய மூங்கில் போலும் தோள்கள் இரண்டையும் அணைந்தவர் யார் என்றால் - நம்பியாரூரர் என்னும் திருப்பெயரை உடைய அற்புதர்.

சொ.பொ.வி :

இப்பாடலில் சுந்தரர் , இறைவன் துணைகொண்டு சங்கிலியாரைத் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சி

கூறப்பெற்றுள்ளது. துணை - ஒப்பு, அளவு - உயர்வு, கணை - அம்பு , வேல் - வேற்படை, கயலிணை - கருமையான இரண்டு கயல்மீன்கள், பிணை - மான்நோக்கம், அணையும் - திருமணம் செய்து கொண்ட.

சாக்கிய நாயனார்

தகடன ஆடையன் சாக்கியன் மாக்கற் றடவரையன்
மகடனந் தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்கல் எறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க மங்கை புவனியிலே. (41)

பொருள்:

பெரிய கற்பாறைகளோடு கூடிய அகன்ற மலையரையன் மகளாகிய, உமாதேவியார் மார்பகத்தைத் தழுவ, குழைந்த திண்ணிய தோளை உடையவராகிய, ஏகம்பர நாதரின் சிவந்த பொன்போல் ஒளிரும் திருமேனியில் செங்கல் துண்டுகளை எறிந்து, சிவலோகத்தில் யாவரும் புகழும்படி அடைந்தவரும், தகடு போன்ற மெல்லிய துவராடையை உடையவருமாகிய சாக்கிய நாயனாரின் ஊர் எது என்றால் - நிலவுலகத்தில் உள்ள சங்கமங்கையாம்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - சாக்கிய நாயனார். ஊர் - திருச்சங்க மங்கை, தொண்டு - கல்லால் எறிந்து சிவனை வழிபட்டமை. தகடன - தகடு போன்ற, ஆடையன் - துவராடையன், மாக்கற் - பெரிய கற்பாறை, மகள் - உமையவள், தனம் - மார்பகம், வண்கம்பர் - ஏகம்பர், சிவபுரம் - சிவலோகம், புவனி - உலகம்.

சிறப்புலி நாயனார்.

புவனியிற் பூதியும் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனாம்
அவனியில் கீர்த்தித்தென் னாக்கூர் அதிபன் அருமறையோன்
சிவனிய மம்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே.(42)

பொருள்:

நிலவுலகத்தில் திருவெண்ணீறு , உருத்திராக்கம் முதலிய சிவவேடம் பொலிவடையப் பெற்று, தன்னிடம் வந்த நியமங்களை

உடைய சிவனடியார்களுக்குத் திருவமுது செய்தல் முதலிய உபசாரங்களைச் செய்கின்ற, மெய்யுணர்ச்சி உதித்தற்கு இடமாய் உள்ளவர் யார் என்றால் - பூவுலகில் புகழ்பெற்ற திருஆக்கூரின் கண் அவதரித்த முதல்வரும், அந்தணர் குலத்தவருமாகிய , சைவ நெறியின்கண் முற்பட்டு நின்ற , பழைய சிறப்புடன் கூடிய நமது சிறப்புலி நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - சிறப்புலி நாயனார். ஊர் - திருஆக்கூர், தொண்டு - அடியவர்களுக்கு அமுது செய்வித்தால். புவனி - பூவுலகம், பூதி - விபூதி, சாதனம் - உருத்திராக்கம், நியமற்கு - நியமங்களை உடைய சிவனடியார்க்கு, தத்துவ காரணமாம் - உபசாரம் செய்யும் உண்மையான உணர்ச்சி, அவனி - பூமியில், கீர்த்தி - புகழ், சிவநியமம் - சைவ சமயத்திற்குரிய நெறிகள்,

சிறுத்தொண்ட நாயனார்.

புலியின் அதளுடைப் புண்ணியற்(கு) இன்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத்(து) ஓங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழில்ஒண்செங் காட்டங் குடியவர் மன்னவனே. (43)

பொருள்:

சோலை சூழ்ந்த ஒளி பொருந்திய திருச்செங்காட்டங்குடியில் உள்ளவர்களுக்கு உரிய முதல்வரை - புலித்தோலை ஆடையாக உடைய சிவபெருமானுக்கு இனிய திருவமுதாகத் , ஒலி பொருந்திய சதங்கை அணிந்த தனது ஒரு மழலை மொழி மகனது உடலை அரிந்து, அஞ்ஞானத்தின் வலியை அழித்த, மிக்க புகழை உடையவர் சிறுத்தொண்ட நாயனார் என்று அறிந்து கொள்ளுங்கள்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியார் - சிறுத்தொண்ட நாயனார், ஊர் - திருச் செங்காட்டங்குடி , தொண்டு - அடியவர்க்கு அமுது படைத்தல். அதல் - தோல், புண்ணியர் - சிவபெருமான், குதலை - மழலை, கலி - அஞ்ஞானம், மலியும் - நெருங்கிய, பொழில் - சோலை.

சேரமான்பெருமான் நாயனார்.

மன்னர் பிரான்எதிர் வண்ணான் உடல்உவர் ஊறியநீற்
றன்னர் பிரான்தமர் போல வருதலும் தான்வணங்க
என்னர் பிரான்அடி வண்ணான் எனஅடிச் சேரன்என்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி வோன்எனும் சேரலனே. (44)

பொருள்:

அரசர்களுக்கு அரசனாகிய தன் எதிரில் வண்ணானானவன் தன் உடம்பின்கண் உவர்மண் நனைந்து ஊறிய நீற்றினால் , வெண்ணீறு அணிந்த சிவபெருமான் அடியவர் போல் வர, தான் எதிர் சென்று வணங்குங்கால், அவன் அரசரே இது என்ன, அடியேன் வண்ணான் என்று கூற, இவரும் அடிமைச் சேரன் என்று சொல்லும் தென்னகத்தாருக்கு முதல்வராய் உள்ளவர் யார் என்றால் - கழறிற்றவார் நாயனார் என்னும் சேர வம்சத்தவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - சேரமான் பெருமாள் நாயனார். ஊர் - சேரநாடு. தொண்டு - அரசாட்சியில் சிவத்தொண்டு செய்தல். மன்னர்பிரான் - அரசனுக்கு அரசன், உவர் - துணி வெளுக்கப் பயன்படும் மண், பிரான் தமர் - இறைவனின் சுற்றத்தார்(சிவனடியார்), பிரான் - அரசன், தென்னர்பிரான் - தென்னாட்டவர்க்குத் தலைவன்.

சேரமான்பெருமாள் நாயனார்- தொடர்ச்சி

சேரற்குத் தென்னா வலர்பெரு மாற்குச் சிவன்அளித்த
பாரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட
சூரற்கு எனதுள்ளம் நன்றுசெய் தாய்இன்று தொண்டுபட்டே.(45)

பொருள்:

சேரமான் பெருமாள் நாயனாரும் , திருநாவலூரின் கண் அவதரித்த நம்பியாரூர்க்குச் சிவபெருமான் கொடுத்தருளிய மதநீர் ஒழுகும் பெருத்த யானையின் முன்பு , தன் படையில் உள்ள குதிரையைச் செலுத்திய வீரரும் ஆகிய வெற்றி பொருந்திய ,

கரும்பு வில் ஏந்திய காமனை வெற்றி கொண்ட சூரருக்கு ,இன்று பழமையான அடிமையாய் என் மனமே நீ நன்று செய்தாய்..

சொ.பொ.வி :

தென்னாவலர் - திருநாவலூரில் அவதரித்த சுந்தரர், பாரக் கடகரி - மதம் பொருந்திய பெரிய யானை, பந்தி - படைவரிசை, இவுளி - குதிரை, கருப்புவில்வீரன் - மன்மதன், தொண்டு பட்டே - தொண்டனாய் (அடிமையாய்)

கணநாத நாயனார்.

தொண்டரை யாக்கி அவரவர்க்(கு) ஏற்ற தொழில்கள் செய்வித்(து)
அண்டர்தங் கோன்அக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடல் காழிக் கணநாதனே. (46)

பொருள்:

தன்னிடம் வந்த அடியார்களைத் திருத்தொண்டு செய்வதற்கு உரியவர் களாக ஆக்கி, அத்திருத் தொண்டர்களுக்கு ஏற்ற பணிகளைத் தான் செய்து, தேவர்க்கு அதிபராகிய சிவபெருமானின் சிறந்த சிவகணங்களுக்கு நாயகராம் முதன்மையைப் பெற்றவர் யார் என்றால் - மேகங்களைத் தனக்கு இடமாகக் கொண்டு வளர்கின்ற , மின்னலாகிய புதல்விக்கு அழகிய இதழை உடைய தாழைகள் வெள்ளிய சோற்றைக் கொடுக்கும் கடற்கரையை உடைய, சீர்காழியில் அவதரித்த கணநாத நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - கணநாத நாயனார். ஊர் - சீர்காழி, தொண்டு - தன்பால் வந்தவர்களைச் சிவனடியார்கள் ஆக்கித் தொண்டு செய்ய வைத்தல். தொண்டரை - சிவனடியார்களாக, அண்டர்தங்கோன் - தேவர்களுக்குத் தலைவன், கணம் - சிவகணம், கொண்டல் - மேகம், மின்னு - மின்னல், மடல் - தாழை மடல், கண்டல் - தாழை , வெண்சோறு - தாழை மடலின் வெண்மைப் பகுதி, காழி - சீர்காழி.

கூற்றுவ நாயனார்

நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யால்அது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலம்எல் லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாளன் ஆகிய கூற்றுவனே. (47)

பொருள்:

சிவபெருமான் சூட்டிய திருவடியையே தமக்கு முடியாகச் சூட்டிக் கொண்டு , நல்ல சிவஞானத்தைத் தம் திருவுள்ளத்தில் நிலைபெறச் செய்தமையால், அச்சிவஞானமே தமக்குத் துணையாக, கடல் சூழ்ந்த நிலவுலகம் முழுதும் தன்னுடைய செங்கோலின் கீழ் நிற்கச் செய்தார் யார் என்றால் - மாலை அணிந்த நெடிய வேற்படையைக் கையில் ஏந்திய களந்தைக் கோனாகிய கூற்றுவ நாயனார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெறும் அடியார் - கூற்றுவ நாயனார். ஊர் - களந்தை, தொண்டு - அரசாட்சியுடன் வேதம் பயின்று சிவஞானத்தைப் பெறுதல். கவித்து - சூடி, போதம் - சிவஞானம், அது - பயின்ற சிவஞானம், ஓதம் - கடல், ஞாலம் - உலகம், ஒருகோல் - தனது செங்கோல், கோதை - மாலை, களப்பாளன் - களந்தைக்கு அரசன்.

சுந்தரமூர்த்தி நாயனார்

கூற்றுக்(கு) எவனோ புகல்திரு ஆரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்அடைக் காயும் இடுதருமக்
கோற்றொத்து கூனனும் நுன்போய்க் குருடனும் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாம்இத் தரணியிலே. (48)

பொருள்:

நம்பியாரூரர் திருமுடிமேல் சூடுவதற்குரிய மாலையும், வாயில் இடுவதற்குரிய அடைப்பைக் காயும் நாள்தோறும் கொடுத்து வந்த, கோல் ஊன்றிச் செல்லும் கூனனும் கூன் நீங்கினான் , மேலும் குருடனும் கண்ணைப் பெற்றுக் கொண்டான். இவை , இந்நிலவுலகத்தில் யாவரும் எடுத்துச் சொல்லும் பழமொழியாக இருப்பதனால் யமனுக்கும் எமக்கும் சம்பந்தம் யாது?

சொ.பொ.வி :

கூன் நிமிர்ந்ததும் கண் பெற்றதும் இறைவன் பரவையாரிடத்தில் தூது சென்ற பகுதியில் நிகழ்ந்த நிகழ்வுகளாகப் பெரிய புராணத்தில் கூறப்படுகிறது. . இவ்விரண்டு நிகழ்ச்சியையும் அறிந்த உலகத்தார் அதை நாள்தோறும் பேசியதால் அது பழமொழி போல் அமைந்தது என்ற குறிப்பைப் பாடல் தருகிறது. கூற்றுக்கு - யமனுக்கு, திருஆரூரன் - சுந்தரமூர்த்தி, ஏற்றுத் தொடையல் - சூடும் மாலை, அடைக்காய் - வெற்றிலை பாக்கு, கோற்றொத்து - கோல்கொண்டு நடக்கும் கூனனும், சாற்றி - கூறி, தரணி - இவ்வுலகம்.

பொய்யடிமை இல்லாத புலவர்.

தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக்(கு) ஈயும் திருஆல வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத்(து) இன்பக் கவிபல பாடும் புலவர்களே. (49)

பொருள்:

திருவருளை எமக்குத் தரும் திருஆலவாயின் கண் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் சிவந்த திருவடிக்கே தாம் கூறும் பொருளும் இன்பமும் கொண்ட பல இலக்கியங்களைப் பாடுகின்ற கவிஞர்கள் - நிலவுலகின் கண் பாண்டியனின் தமிழ்ச் சங்கத்தில் கபிலரும், பரணரும், நக்கீரரும் முதலாகிய நாற்பத்தொனபது பொய்மை இல்லாத புலவர்கள் என்று சொல்லப் படுபவர் ஆவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார்கள் - தொகையடியார்கள், ஊர் - மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்தவர்கள். தொண்டு - இறைவன் மீது கவிதை பாடுபவர்கள். தரணி - நிலவுலகம், பொய்ம்மை இலா - பொய்ம்மை பேசாத, ஈயும் - தரும், கவி - இலக்கியம்.

புகழ்ச்சோழ நாயனார்.

புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழன(து) என்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக்(கு) ஈந்ததோர் வண்புகழே. (50)

பொருள்:

ஒளியை உடைய உடைவாளை , வெற்றி மிக்க எறிபத்த நாயனார் கையில் என்னையும் கொல்லும் என்று கொடுத்த , ஒப்பற்ற வள்ளண்மை உடைய புகழை-- அயல் நாடுகளில் நின்ற அரசர்களையும், சிங்கள நாட்டு அரசனையும் அழித்த, அரச குலத்தில் நிலைபெற்ற புகழை உடைய கோகனநாதன் என்னும், சோழனது பரம்பரையில் அவதரித்த முதல்வராகிய, நன்மை மிக்க புகழ்ச்சோழ நாயனார் என்று அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - புகழ்ச்சோழ நாயனார், ஊர் - சோழநாட்டு உறையூர், தொண்டு - சிவத்தொண்டு. புலம் - நாடு, சிங்களநாடு - இலங்கை நாடு, கோகனநாதன் - சோழனது பெயர்.(ஆதித்த சோழனாக இருக்கலாம்) , மன்னிய - நிலைத்த, நகுசுடர்வாள் - ஒளிபொருந்திய கைவாள், எறிபத்தர் - அறுபத்து மூன்றுநாயன்மாருள் ஒருவர், வண்புகழ் - ஒப்பற்ற வள்ளண்மை உடைய புகழ்.

நரசிங்க முனையரைய நாயனார்

புகழும் படிஎம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண்டு அவற்குஅன்று இரட்டிபொன் இட்டுஅவனி
திகழு முடிநர சிங்க முனையர சன்திறமே (51)

பொருள்:

சிவனடியார்களுக்கு உயர்ந்த பொன் கொடுக்கும் பொழுது, அனைவரும் இகழ்ச்சி செய்யும்படி ஒரு தவ வேடம் உடையானிடத்து, மகளிர்களால் செய்யப்பட்ட நகக்குறி முதலியன இடம் பெற்ற கோலமானது, உடம்பு முழுவதும் இருப்பது கண்டு , அன்று அவனுக்கு இருமடங்கு பொன் கொடுத்து, நிலவுலகத்தின் கண் புகழ் விளங்கும்படி அரசாட்சி செய்த, நரசிங்க முனையரையர் என்னும் அரசனது நிலைமையை எடுத்துச் சொல்லும் முறைமை எம்மால் இயலுமோ?

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - நரசிங்க முனையரைய நாயனார். தொண்டு - அடியவர்களுக்குப் பொன் கொடுத்தல். புகழும்படி எம் பரமே - புகழும் தன்மை எமது அளவில் அடங்குமோ, தவர்க்கு - தவவேடம், பொன்னிடுவோன் - பொன்கொடுப்போன், மடவார்புனை கோலம் - பெண்களின் நகக்குறி, காமநோய் ஆகியவை தெரியும்படி அமைந்த கோலம், இரட்டி - இருமடங்கு, அவனி - உலகு, திகழுமுடி - திகழுகின்ற அரசாட்சி.

அதிபத்த நாயனார்

திறம்அவர் மீன்படுக் கும்பொழு(து) ஆங்கொரு மீன்சிவற்குஎன்(று)
உறவமர் மாகடற் கேவிடு வோன்ஒரு நாட்கனக
நிறமவர் மீன்பட நின்மலற்(கு) என்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த னாகிய பொய்யிலியே. (52)

பொருள்:

தம் குலத்திற்கு உரிய வலை வீசி மீன் பிடிக்கும் பொழுது, ஒரு மீனைச் சிவபெருமானுக்கு என்று அம்மீன் இருக்கும் கடலிலேயே நாள்தோறும் விடுகின்றவரும் - ஒருநாள் ஒரே ஒரு பொன்மயமான மீனானது தன் வலையில் அகப்பட, அதனையும் சிவபெருமானுக்கு என்றே விட்டவரும் யார் என்றால் - நகரின் புறத்தே தாமரை மலர்கள் பூத்திருக்கும் புனல் சூழ்ந்த திருநாகையில் அவதரித்த அதிபத்த நாயனார் என்னும் பெயரை உடைய உண்மையான அடியவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - அதிபத்த நாயனார், ஊர் - நாகப்பட்டினம், தொண்டு - மீன்பிடிக்கும் தொழில். திறம் - குலத்திற்கு உரியது , மீன் படுக்கும் பொழுது - மீனைப் பிடிக்கும் பொழுது, சிவற்கு - சிவனுக்கு, உற - பொருந்த, அமர் மாகடல் - அம்மீன் இருக்கும் கடலுக்கே, கனகநிறம் - பொன்நிறம், நின்மலற் - சிவபெருமான், கமலம் - தாமரை, புறமமர் - நகர்ப்புறம், நாகை - நாகப்பட்டினம், பொய்யிலி - பொய்ம்மை இல்லாத மெய்யடியார்.

கலிக்கம்ப நாயனார்

பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க்(கு) ஆட்பட்டுத் தன்அடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தான்அவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர்வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே. (53)

பொருள்:

தனக்கு அடிமையாய் இருந்த ஒருவர் உலக வாழ்க்கையைத் துறந்து, இறைவனுக்கு அடிமைப் பட்டுச் சைவ வேடங் கொண்டு, தமது இல்லத்திற்கு அடியார்களோடு எழுந்தருள - அவ்வடியாருடைய திருவடிகளைக் கழுவ மனைவி நாணம் கொண்டு , கரகநீர் கொடுக்காது ஒழிய, அம்மனைவியின் கையை வெட்டியவர் யார் என்றால் - திருப்பெண்ணாகடத்தில் அவதரித்த கலிக்கம்ப நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியவர் - கலிக்கம்பர், ஊர் - திருப்பெண்ணாகடம், தொண்டு - அடியவர்களுக்கு அமுது படைத்தல். பொய்யைக் கடிந்து - உலக வாழ்க்கையை நீக்கி, புண்ணியர் - சிவபெருமான், தன்னடியான் - முன்பு தனக்கு அடிமையாய் (வேலைக்காரனாய் இருந்தவன்), சைவத்திருவுரு - சைவவேடம், தாள் - திருவடி, வையத்தவர் - உலகத்தவர், வெள்கி - நாணம் கொண்டு, தடிந்தவன் - வெட்டியவன்.

கலிய நாயனார்

கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற்(கு) ஒளிவிளக்(கு) ஏற்றற்(கு) உடல்இலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினால்
நம்பற்(கு) எரித்த கலிஒற்றி மாநகர்ச் சக்கிரியே. (54)

பொருள்:

கட்டுத் தறியை முறிக்கும் யானைக்கும், சிலந்திப் பூச்சிக்கும் அருள் வழங்கிய நெற்றிக் கண்ணை உடையோராகிய சிவபெருமானுக்கு, திருவிளக்கு திருக்கோயிலில் ஏற்றுவதற்குப் பொருள் இல்லாதவராய், எண்ணெய் விற்றும் செக்காட்டியும் தான்பெற்ற கூலிப் பொருளைச் சிவபெருமானுக்குத் திருவிளக்கு

ஏற்றியவர் யார் என்றால் - திருவொற்றியூரில் செக்காட்டும் குலத்தில் தோன்றிய கலிய நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - கலிய நாயனார், ஊர் - திருவொற்றியூர், தொண்டு - திருக்கோயிலில் விளக்கேற்றுதல் பணி. கம்ப - கட்டுத்தறி, கரி - யானை, கண்ணுதலோன் - நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான், உம்பர் - தேவர் உலகம், உடல் - பொருள் என்ற கருத்தில் வந்துள்ளது, இலனாய் - இல்லாதவராய், கும்பத்தயிலம் - குடத்து எண்ணெய், செக்குழன்று - செக்காட்டி , கூலியினால் - கூலிப்பொருள், நம்பர் - சிவபெருமான், ஒற்றிமாநகர் - ஒற்றியூர், சக்கிரி - செக்கு வாணிகத்தார்க்கு வழங்கும் பெயர்.

சத்தி நாயனார்

கிரிவில் லவர்தம் அடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ்சத்தியே. (55)

பொருள்:

மேருவை வில்லாக உடைய சிவபெருமானின் திருஅடியவர்களை, தமக்கு முன்னே குற்றம் கூறும் கேட்டினை உடையவரது நாக்கினை அறுக்கின்றவரும் - பகைவரை வெற்றி கொள்ளும் பூட்டிய வில்லை உடையவரும் யார் என்றால்- வயலிடத்து உள்ள செங்கழுநீரில் தங்கி வருகின்ற தென்றல் காற்று, வீதிகளில் மணம் வீசுகின்ற தெற்குத் திசையில் உள்ள, வரிஞ்சை நகரத்தில் வாழ்ந்த சத்தி நாயனார் ஆவார்.

சொ.பொ.வி:

பாடலில் இடம்பெற்ற அடியார் - சத்தி நாயனார், ஊர் - திருவரிஞ்சைக்களம், தொண்டு - சிவனடியார்களை இகழ்ச்சி செய்வோரின் நாக்கினை அறுத்தல். கிரி - மேருமலை, கீழ்மை சொன்ன - குற்றம் கூறிய, திருவில்லவரை - செல்வம் இல்லாதவரை(கேடுற்றவரை), நாவரிவோன் - நாக்கை அறுப்பவன், திருந்தாரை - பகைவரை, மருவு - வீசும், விரை - மணம்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

சத்தித் தடக்கைக் குமரன்நல் தாதைதன் தானம்எல்லாம்
முத்திப்பதம்ஓரார் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் றால்அரற் காய்ஐயம் ஏற்றவென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே. (56)

பொருள்:

வேற்படை ஏந்திய நீண்ட திருக்கரத்தை உடைய முருகக் கடவுளின் தந்தையாகிய, சிவபெருமான் வீற்றிருந்து அருளும் தலங்கள் தோறும், முத்தியைத் தருகின்ற பொருளை உடைய ஒரு வெண்பாவைப் பாடி, முழுமையும் துறந்து, சிவபெருமான் திருப்பணிக்குத் தொண்டாற்றும்--- முடிசூடிய அரசர்களில் மும்மடங்கு அதிகம் அருளைச் செய்யும் பத்திக்கு ஒரு கடல் போன்றவர் யார் என்றால் - ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ அரசன் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - ஐயடிகள் காடவர்கோன் நாயனார், ஊர் - பல்லவநாடு, தொண்டு - சிவத்தலங்கள் தோறும் வெண்பாப் பர்டுதல், சத்தி - வேல், குமரன் - முருகன், தானம் - திருத்தலம், முத்திப்பதம் - முத்திக்குரிய பாடல் பொருள், முடியரசர் - முடிசூடிய அரசர், மும்மை நன்றால் - மூன்று மடங்கு , அரற்காய் - சிவனுக்கு, ஐயம் - யாசித்தல்(இங்கு யாசித்தல் என்பதை விடத் தொண்டு செய்தல் என்று இருப்பதே சிறப்பு) , பத்திக்கடல் - பத்திக்கடல் போன்றவர்.

சுந்தரமூர்த்தி நாயனார்

பல்லவை செங்கதி ரோனைப் பதித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூர்அரன் பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி நாவலூர் ஆகின்ற நன்னகரே. (57)

பொருள்:

சூரியனது பற்களை உடைத்த, சிவபெருமான் திருவடிகளைப் புகழுகின்ற சொல்லை உடையவரும், தெற்குத் திசையில் உள்ள திருப்புகலூரில் அன்பினால் பொன் பெற்றுக்

கொண்டவரும் - திருநாட்டியத்தான்குடியில் எழுந்தருளியிருக்கும் மாணிக்க வண்ணருக்கு நல்லவரும் ஆகிய, நம்பியாரூரரின் ஊர் எது என்றால் - திருநாவலூர் என்னும் திருப்பதியாகும்.

சொ.பொ.வி :

இப்பாடலில் சுந்தரர் திருப்புகலூரில் செங்கல்லை இறைவன் திருவருளால் பொன்னாக மாற்றிக் கொண்டதும், திருநாட்டியத்தான்குடியில் இறைவற்கு நண்பராகியதும் ஆகிய வரலாற்றுச் செய்திகள் கூறப்பெற்றுள்ளன. பல்லவை - பற்கள், செங்கதிரோன் - சூரியன், பாதம் - திருவடியை, தென்புகலூர் - தென்திசையில் உள்ள திருப்புகலூர், துய்ய - தூய்மையான, மாணிக்க வண்ணன் - திருநாட்டியத்தான்குடி இறைவனின் பெயர், நாவலூர் - திருநாவலூர்.

கணம்புல்ல நாயனார்

நன்னக ராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய அரர்க்குநற் புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோள்எந்தை தந்தை பிரான்எம் கணம்புல்லனே. (58)

பொருள்:

நல்ல நகராகிய இருக்குவேளூரில் அவதரித்து, பின் வறுமையடைந்து, திருமகள் வாழும் திருத்தில்லைக்குச் சென்று, திருப்புலீச்சுரத்தில் வீற்றிருக்கும் முதல்வராகிய சிவபெருமானுக்கு, நல்ல கணம்புல்லினால் விளக்கிகேற்றியவர் யார் என்றால் - திரண்ட கல் போலும் தோள்களை உடைய, என்னுடைய தந்தைக்கும், தந்தையின் தந்தைக்கும் முதல்வராகிய எம் கணம்புல்ல நாயனார் ஆவார்.

சொ.பொ.வி:

பாடலில் இடம்பெற்ற அடியார் - கணம்புல்ல நாயனார். ஊர் - இருக்கு வேளூர், தொண்டு - இறைவனுக்குத் திருக்கோயிலில் விளக்கெரித்தல் பணி. நல்குரவு - வறுமை, புலீச்சுரத்து - தில்லைத் திருக்கோயிலின் பெயர், கன்னவில் - கல் போன்று திரண்ட, தந்தை பிரான் - தந்தைக்குத் தந்தை.

காரி நாயனார்

புல்லன வாகா வகைஉல கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வும்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்கும் கயிலைபுக் கான்என்பரால்
கல்லன மாமதில் சூழ்கட வூரினிற் காரியையே. (59)

பொருள்:

மணிகள் பதிக்கப் பெற்ற பெரிய மதில் சூழ்ந்த திருக்கடவூரில் வாழ்ந்த காரி நாயனார், தான் செய்யும் நூல்கள் உலகத்தில் அற்பம் ஆகாத வண்ணம் சொற்பொருள் அமைந்த நூலையும், அந்நூலை அரங்கேற்றம் செய்யும் பொழுது சொல்லும் முறைமையையும், அவையில் இருப்போர் நகைக்காத வண்ணம் செய்து, ஒளி வீசும் மேரு மலையை வில்லாக உடைய சிவபெருமானைப் போற்றித் திருக்கயிலையை அடைந்தார் என்று அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - காரிநாயனார், ஊர் - திருக்கடவூர், தொண்டு - இறைவன் மீது கவிபாடுதல். (இவர்பாடியதாகக் காரிகோவை என்ற அகத்துறைக் கோவை இலக்கியம் விளங்குகிறது) புல்லன ஆகா - அற்பம் ஆகாத வண்ணம், சொல்லின - சொல்லப்பட்ட உரை, சுடர்ப்பொன் குவடு - ஒளி வீசும் மேருமலை, வில்லனை - வில்லை உடைய சிவனை, கல்லன மாமதில் - மாணிக்கக் கற்கள் பதிக்கப் பெற்ற மதில்கள்.

நின்றசீர் நெடுமாற நாயனார்

கார்த்தண் முகில்கைக் கடற்காழி யர்பெரு மாற்கெதிரா
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற் றாங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே. (60)

பொருள்:

கருமை நிறமான மேகம் போலும் வள்ளண்மை கொண்ட கையை உடைய, கடல் சூழ்ந்த சீர்காழிக்கு முதல்வராகிய திருஞானசம்பந்தருக்கு எதிராய், விவாதம் செய்த சமணர்கள்

தோல்வியுற்றதைக் கண்டு , அச்சமணர்களை மதுரையில் கழுவேற்றிய பாண்டியன் என்று கூறும் புகழுரை----- முன்பு திருநெல்வேலியில் தன்னை எதிர்த்த பகைவரை வெற்றி கொண்ட நின்றசீர் நெடுமாற நாயனாருடையது என்பர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - நின்றசீர் நெடுமாற நாயனார், ஊர் - மதுரை, தொண்டு - திருஞானசம்பந்தரால் சைவனாகி, சைவத்தைக் காத்தல். கார் - கருமை , கடற்காழி - கடல்சூழ்ந்த சீர்காழி, ஆர்த்த -ஆரவாரித்து வாதம் புரிந்த, அழிந்தது - தோற்றது, நுதி - முனை, பஞ்சவன் - பாண்டியன், நெல்வேலி - திருநெல்வேலி.

வாயிலார் நாயனார்

மாறா அருளரன் தன்னை மனஆ லயத்திருத்தி
ஆறா அறிவாம் ஒளிவிளக்(கு) ஏற்றி அகமலராம்
வீறா மலரளித்(து) அன்பெனும் மெய்யமிர் தம்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே. (61)

பொருள்:

தம் உயிருள் நீங்காத திருவருளை உடைய சிவபெருமானைத் தனது மனமாகிய திருக்கோயிலுள் எழுந்தருளிவித்து, தணியாத உணர்வு என்கின்ற ஒளியுடைய விளக்கை ஏற்றி, அகம் என்னும் பெருமையுடைய மலர்களை அணிவித்து, பேரன்பு என்னும் உண்மையான திருவமுதை நிவேதனம் செய்தவர் யார் என்றால் -- பெருமை நிறைந்த மயிலாப்பூரில் அவதரித்த வாயிலார் நாயனார் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற நாயனார் - வாயிலார் நாயனார். ஊர் - மயிலாப்பூர், தொண்டு - மனக்கோயில் கட்டியது. மாறா - நீங்காத, மனம் - உள்ளம், ஆறா - தணியாத, அகமலர் - உள்ளமாகிய மலர், வீறா - பெருமையுடைய, அமிர்தம் - நிவேதனம், வீரார் - பெருமை நிறைந்த.

முனையடுவார் நாயனார்

என்று விளம்புவர் நீடூர் அதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி ஏற்றெறிந்து
வென்ற பெருஞ்செல்வம் எல்லாம் கனகநன் மேருவென்னும்
குன்றம் வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே. (62)

பொருள்:

திருநீடூரின் கண் தோன்றிய தலைவராகிய முனையடுவார் நாயனாரை. எந்த நாளும் போரில் தோற்றவர்களுக்காகக் கூலி வாங்கிக்கொண்டு, அவர்களின் பகைவரைப் போரிட்டு வெற்றி கொண்டு, அதனால் கிடைத்த செல்வத்தை , மேரு மலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் அடியவர்களுக்குக் கொடுத்தவர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - முனையடுவார் நாயனார். ஊர் - திருநீடூர், தொண்டு - படைத்துணை செய்து வரும் பொருளை அடியார்க்குக் கொடுத்தல். அதிபன் - தலைவன், முனையடுவோன் - நாயனார், அமருள் - சண்டையில், அழிந்தவர் - தோற்றவர், ஏற்று - பெற்றுக்கொண்டு, கனகநன் மேரு - பொன்னிறமான மேரு மலை, தமர் - அடியவர்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்(கு) உயிர்அன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவிஅவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண் டியினில் பராபரத்தேன்
மடுத்தான் அவனென்பர் வன்தொண்டன் ஆகின்ற மாதவனே.(63)

பொருள்:

முதலை உண்ட பிள்ளைக்கு உயிரைக் கொடுத்தவரும், திருப்புக்கொளியூர் அவிநாசியில் பத்திச்சுவை அமைந்த திருப்பதிகம் பாடியவரும், திருமுருகன் பூண்டியில் தம்மைச் சூழ்ந்த வேடர்களைத் துரத்தியவரும் , மேன்மையான ஞான ஆனந்த அமுதைப் பருகியவரும் யார் என்றால் - வன்தொண்டர் என்னும்

பெரிய தவத்தை உடையோர் என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

சொ.பொ.வி:

முதலை உண்ட பாலனை அவிநாசியில் உயிருடன் மீட்ட செய்தியும், திருப்புக்கொளியூரில் இனிய பதிகம் பாடிய செய்தியும், திருமுருகன் பூண்டியில் சேரமான் பெருமாள் கொடுத்த பொருளைக் கவர்ந்த வேடர்களைப் பற்றிப் பாடி, மீண்டும் செல்வத்தைப் பெற்ற நிகழ்ச்சியும் கூறப் பெற்றுள்ளன. கொடுத்தான் - திரும்பக் கொடுத்தான், தொடுத்தான் - பதிகம்பாடினான், வேடர் சுற்றம் - வழிப்பறி செய்யும் வேடர்கள், பராபரத் தேன் - ஞான அமுது, மாதவன் - பெரிய தவத்தை உடையவன்.

கழற்சிங்க நாயனார்.

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்கு ஆரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை
காதிவைத் தன்றோ அரிவதென்(று) ஆங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே.(64)

பொருள்:

பெரிய தவமுடையாருடைய வைப்புநிதி போன்றவரும், திருவாரூரின் கண் சிந்தாமணி போன்றவரும் ஆகிய சிவபெருமானுக்குத் ஈ திருப்பள்ளித் தாமம் சூட்டுவதற்கு வைத்திருந்த மலரை, எடுத்து மோந்த தன் மனைவியின் மூக்கைச் செருத்துணை நாயனார் அறுக்க, அதனைக்கண்டு மலர் எடுத்த அழகிய கையை வெட்டித்தான் மூக்கை அறிய வேண்டும் என்று, மனைவியின் கையை வெட்டியவர் யார் என்றால் - வண்டுகள் ஒலிக்கின்ற பசுமையான மாலையை அணிந்த கழற்சிங்க நாயனார் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - கழற்சிங்க நாயனார். ஊர் - திருவாரூர், தொண்டு - ஆலயங்களுக்கு அரும்பணி செய்தல். மாதவத்தோர் - பெரிய தவத்தை உடையவர், வைப்பு - வைப்புநிதி, ஆரூர் - திருவாரூர், மணி - சிந்தாமணி, போது - மலர், மோந்த - முகந்து பார்த்த, அரிய - அறுத்த, கைதடிந்தான் - கையை வெட்டினன், நாதம் - ஒலி, கோதை - மாலை.

இடங்கழி நாயனார்

சிங்கத்(து) உருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வம் எனப்பறைபோக்(கு)
எங்கட்(கு) இறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே.(65)

பொருள்:

நரசிங்க உருவம் கொண்ட திருமாலின் அழித்த, நடராசப் பெருமானது திருஅம்பலத்து முகட்டை மாற்று உயர்ந்த பொன்னால் அலங்கரித்த , சோழர் குலத்து முதலோனாய் உள்ளவனும், பிறைச் சந்திரனை அணிந்த சடையை உடைய சிவபெருமான் அடியார்களுக்கு எம்செல்வம் உரியது என்று பறை அறிவிக்கும் முதன்மையை உடையவரும் யார் என்றால் - இருக்கு வேளூரில் தோன்றிய தலைவராகிய இடங்கழி நாயனார் என்று கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - இடங்கழி நாயனார், ஊர் - இருக்கு வேளூர், தொண்டு - கோயில் திருப்பணி செய்தல். சிங்கத்து உருவனை - நரசிங்க அவதாரம் எடுத்த திருமாலை, செற்று - செருக்கை அழித்து, சிற்றம்பலம் - தில்லைச் சிற்றம்பலம், கனகம் - பொன், ஆதித்தன் - சோழ அரசன், தமர் - அடியவர், பறைபோக்க -பறை அறிவித்து,

செருத்துணை நாயனார்.

கழிநீள் கடல்நஞ்(சு) அயின்றார்க்(கு) இருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்தன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென்(று) இயம்புவரால்
செழுநீர் மருகல்நன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே.(66)

பொருள்:

செழுமையான நீர்வளம் மிக்க மருகல் நாட்டில் உள்ள தஞ்சாவூரின் கண் அவதரித்த செருத்துணை நாயனாரை, மிக நீண்ட பாற்கடலில் உதித்த ஆலகாலத்தை அமுதாக உண்ட சிவபெருமானுக்குத், திருப்பள்ளித் தாமத்திற்காக வைத்திருந்த

மணம் கமழும் பூவினை, அனைவரும் எடுத்துக் கூறும் பெரும் புகழை உடைய கழற்சிங்க நாயனார் மனைவி எடுத்து முகர்ந்ததுமே, அவளின் அழகு மிக்க குமிழமலர் போன்ற மூக்கை அறிந்தவர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - செருத்துணை நாயனார். ஊர் - மருகல் நாட்டில் உள்ள தஞ்சாவூர், தொண்டு - இறைவற்குப் பூமாலை தொடுக்கும் பணி. கழிநீள் - மிக நீண்ட, அயின்றார்க்கு - அமுது செய்தவர்க்கு, கடிமலர் - நறுமணமிக்க மலர், மொழிநீள் - யாவராலும் புகழப் படுகின்ற நீண்ட, மோத்தலுமே - முகர்ந்துபார்த்தலுமே, எழில்நீள் - அழகுடன் நீண்ட, குமிழ்மலர் - குமிழம்பூ, செழுநீர் - செழுமையான நீர்வளம்.

புகழ்த்துணை நாயனார்

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையம் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனம்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியா(து)
அருவரை வில்லி அருளி நிதியது பெற்றனனே. (67)

பொருள்:

செருவிலிபுத்தூரில் அவதரித்த புகழ்த்துணை நாயனார், அந்த நாட்டில் தானியங்களின் அளவு குறைந்த பஞ்சகாலம் ஏற்பட, உணவில்லாமல் திருமேனி வலிகுன்றி, சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும் பொழுது , தன் கை சோர்ந்து அபிடேகக் கலசம் சிவபெருமான் திருமுடியில் விழ, அதனைக் கண்டு பொறாது வருந்தி, மேருவை வில்லாக உடைய அச்சிவபெருமானின் திருவருளால் படிக்காசு பெற்றார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - புகழ்த்துணை நாயனார். ஊர் - செருவிலிபுத்தூர், தொண்டு - இறைவற்குத் திருமஞ்சனம் ஆட்டுதல்,

கோட்புலி நாயனார்

பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்றம் அறுக்கும் தொழில்திரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்றம் அறுக்குநங் கோட்புலி நாவற் குரிசிலஅருள்
பெற்ற அருட்கடல் என்றுல(கு) ஏத்தும் பெருந்தகையே. (68)

பொருள்:

இடபக் கொடியை உடையவராகிய சிவபெருமானது , திருவிரையாக்கலி என்னும் திருஆணையைப் பிழைத்தவர்களாகிய , தமது சுற்றத்தாரை வாளால் வெட்டும் தொழிலைப் பூண்ட , திருநாட்டியத்தான்குடி என்னும் திருத்தலத்தில் அவதரித்த தலைவரும், நமது குற்றங்களை நீக்கி அருளும் கோட்புலி என்னும் திருப்பெயரை உடையவரும் யார் என்றால் - நம்பியாரூரரின் திருவருளைப் பெற்ற கருணைக்கடல் என்று உலகில் உள்ளோர் துதிக்கும் பெருமை உடையவர் ஆவார்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - கோட்புலி நாயனார், ஊர் - திருநாட்டியத்தான்குடி, தொண்டு - போர்த்தொழிலுக்குத் துணை புரிதல். பெற்றம் - இடபம், உயர்த்தோன் - கொடியை உடையவன், விரையாக்கலி - இச்சொல் இறைவனின் ஆணைக்காக அக்காலத்தில் வழங்கப்பட்டது. சுற்றம் - உறவினர், அறுக்கும் - வெட்டும், கோன் - தலைவன், நாவற்குரிசில் - திருநாவலூர் சுந்தரர், அருட்கடல் - கருணைக்கடல்.

சுந்தரமூர்த்தி நாயனார்

தகுமகள் பேசினோன் வீயவே நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னால்ஒற்றி யூர்உறை புண்ணியன்தன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளால்இவ் வியனுலகம்
நகுவழக் கேநன்மை யாப்புணர்ந் தான்நாவ லூர்அரசே. (69)

பொருள்:

தக்க மகட்பேசி விடுத்த கணவன் இறக்க, அதனால் வைதவ்வியம் அடைந்த சங்கிலி நாச்சியாரிடத்துத், தம்மிடத்து உதித்த திருமண விருப்பால், திருவொற்றியூரின்கண் வீற்றிருந்து

அருளும் சிவபெருமானது மேலான தாமரை மலர்போலும் திருவடிகளை வணங்கி, அவரின் திருவருளால் இந்த உலகத்தில் உள்ளோர் நகையாடுவதற்குரிய, களவொழுக்கத்தை நன்மையாகக் கொண்டு, சங்கிலி நாச்சியாரைத் திருமணம் புரிநதவர் யார் என்றால் - திருநாவலூரின் கண் அவதரித்த நம்பியாரூரர் ஆவார்.

சொ.பொ.வி :

இப்பாடலில் சங்கிலி நாச்சியாரின் தவநிலையைக் கண்டு மணம் பேசி வந்த மணமகன் திரும்பிப் போகும் பொழுது இறந்து பட்டான். அவ்வாறு இறந்ததினால் அக்கால வழக்கப்படி வைதவ்வியம் நிலையைச் சங்கிலியார் அடைந்தார் என்பதும், அச்சங்கிலியாரைச் சுந்தரர் உலகத்தார் ஒருவிதமாய் இகழ்ச்சியாகக் கூறும் களவு வாழ்க்கைக்கு முற்பட்டு, திருவொற்றியூர் இறைவன் திருவருளால் அவரை மணந்துகொண்ட செய்தி இடம் பெற்றுள்ளது. தகமகள் பேசினோன் - பெண்கேட்டு வந்தவன், வீயவே - இறந்து போகவே, நூல் போன சங்கிலி - வைதவ்வியம் அடைந்த சங்கிலியார், மணக்காதலினால் - திருமண விருப்பத்தால், புண்ணியன் - சிவபெருமான், உலகம் நகுவழக்கு - உலகத்தார் நகைக்கும் களவு ஒழுக்கம்,

பத்தராய்ப் பணிவார்கள்.

அரசினை ஆரூர் அமரர் பிரானை அடிபணிந்திட்டு
உரைசெய்த வாய்தடு மாறி உரோம புளகம்வந்து
கரசர ணாதி அவயவம் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர் என்று தொகுத்தவரே. (70)

பொருள்:

திருவாரூரின்கண் எழுந்தருளும் தேவர் பிரானை வணங்கித் துதித்து, வாய் குழறி, மயிர் கூச்செறிந்து, கைகால் முதலிய அங்கங்கள் விதிர்விதிர்த்து, ஆனந்தக் கண்ணீர் சொரிகின்ற திருமேனியை உடையவர்கள், பத்தர் என்று சொல்லப் பட்டவர் ஆவர்.

சொ.பொ.வி :

இப்பாடலில் தொகையடியார்களில் ஒருவராகிய பத்தராய்ப் பணிவார்கள் குறிக்கப் பெறுகின்றனர். ஆரூர்அமரர் - திருவாரூர் இறைவர், வாய் தடுமாறி - வாய்குழறி, உரோமம் புளகம் வந்து - மயிர் குத்திட்டு நிற்றல், சரணாதி - அவயவங்களை இறைவனிடத்தில் சரணடைய வைத்து, அங்கத்தினோர் - திருமேனியை உடையோர்,

பரமனையே பாடுவார்.

தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசை யவ்வகையில்விண் தோயும்நெற்றி
வகுத்த மதில்தில்லை அம்பலத் தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல் லோர்என்ப உத்தமரே. (71)

பொருள்:

நூல்களில் சிறப்பாகக் கூறப்பட்ட வடமொழியும், தென்மொழியுமாகிய இவற்றில், எது தன்னிடத்தில் உள்ளதோ அந்த மொழியால் இயலும் இசையுமாகிய கூறுபாட்டால் , விண்ணகம் வரை உயர்ந்த உச்சியை உடைய மதில் சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலத்தாரின், சிறந்த தாமரை மலர் போலும் திருவடிகளின் மேல் செலுத்திய , தங்கள் மனதுடன் பாட வல்லவரை உத்தமர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

இப்பாடலில் தொகை அடியவர்களில் ஒருவராகிய பரமனையே பாடுவார் கூறப்பட்டுள்ளனர். தொகுத்த - சிறப்பாகக் கூறப்பட்ட, வடமொழி, தென்மொழி - மொழிகள், தோன்றியதோ - அவ்விரண்டில் தம்பால் எது சிறந்து நிற்கிறதோ, இயலிசை - இலக்கிய வகைகள், விண்தோயும் - வானை முட்டும், நெற்றி - உச்சி, மலர்ப்பாதம் - தாமரை போன்ற திருவடி, பாட வல்லவர் - கவிதை பாடவல்லவர்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உத்தமத் தானத்(து) அறம்பொருள் இன்பமொ டியெறிந்து
வித்தகத் தானத்து ஒருவழிக் கொண்டு விளங்கச்சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத கமல மலரடிக்கீழ்ச்
சித்தம்வைத் தார்என்பர் வீடுபே(று) எய்திய செல்வர்களே.(72)

பொருள்:

இம்மை வாழ்வில் வீட்டின்பம் அடைந்த சிவஞானச் செல்வர்களை (சீவன் முத்தர்களை) , உத்தமமாகிய சிவ புண்ணியத்தினால், அறம், பொருள், இன்பமாகிய காட்டை ஒடித்து எறிந்து, மேன்மையான இதயம் , கண்டம், நாவின்அடி, புருவமத்தியம், பிரமரந்திரம் என்னும் ஐந்து தானங்களில் உள்ள , தாமரைக்கு மேலான மார்க்கத்தில் , சுழுமுனை திறந்து கும்பிக்கும் அப்பியாசத்தால் சென்று, விளங்கும்படி சிரசில் ஊமத்தம் பூவை முடித்த சிவபெருமானது திருவடித் தாமரைகள் என்னும் பரை வியாபகத்தில் அடங்கிச் சித்தத்தை ஒருக்கி நின்றவர்கள் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

இப்பாடல் தொகையடியார்களில் ஒருவராகிய சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாரைக் குறிப்பிடுகிறது. ஒடியறிந்து - அறம் முதலாகிய மூன்றையும் காடுபோல் வெட்டி, மத்தம் - ஊமத்தம்பூ, சித்தம் - சிந்தையில், வீடுபேறு - முத்திப் பேரின்பம்.

திருவாரூர்ப் பிறந்தார்கள்

செல்வம் திகழ்திரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ ரேஅத னால்திகழச்
செல்வம் பெருகுதென் ஆரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்(கு) அணித் தாய செழுநெறியே. (73)

பொருள்:

செல்வம் விளங்கும் திருவாரூர்த் திருநகர் மதில் வட்டத்திற்குள் பிறந்தவர்கள். சிவபெருமானின சிவகணக் கூட்டத்துள் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அதனால் உயர்ந்த செல்வ வளம் மிக்க தெற்கின் கண் உள்ள அத்திருவாரூரில் பிறந்தவர்களுடைய திருவடியே, முத்திநெறியை அடைபவர்களுக்கு உரிய நல்ல நெறியாகும்.

சொ.பொ.வி :

இப்பாடலில் தொகையடியார்களில் ஒருவராகிய திருவாரூரில் பிறந்தவர்களின் பெருமை கூறப்பெற்றுள்ளது. மதில்

வட்டம் - திருவாரூர் கோட்டைக்குள் பிறந்தவர்கள், செல்வன் - சிவபெருமான், திருக்கணம் - சிவகணங்கள், செல்வம் - செல்வவளம், தென்ஆரூர் - தெற்குத் திசையில் உள்ள திருவாரூர், சேவடி - செம்மையான திருவடிகள், செல்வநிதி - செல்லுவதற்குரிய முத்திநெறி, அணித்து - அருகிலுள்ள நன்னெறியாம்.

முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்

நெறிவார் சடையரைத் தீண்டிமுப் போதும்நீ(டு) ஆகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர் நம்மையும் ஆண்டமரர்க்(கு)
இறையாய்முக் கண்ணும்எண் தோளும் தரித்(து)ஈறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெருமாற்(கு) உறை வாய உலகினிலே. (74)

பொருள்:

சுருண்ட நீண்ட சடையினை உடைய சிவபெருமானை , மூன்று காலமும் தொட்டு, உயர்ந்த சிவாகம உணர்வினால், வணங்கி அருச்சனை செய்து, வழிபாடு செய்கின்றவர் எம் தரத்தினரை அடிமை கொண்டு, தேவர்களுக்கு முதல்வராய், மூன்று கண்களையும் எட்டுத் தோள்களையும் தாங்கிய சிவபெருமான் எழுந்தருளுவதற்குரிய சிவலோகத்தில் , அழியாத செல்வத்தோடு வசிப்பார்கள்.

சொ.பொ.வி :

பாடலில் தொகையடியார்களில் ஒருவராகிய முப்பொழுதும் திருமேனி தீண்டுவார் (ஆலயக் குருக்கள்மார்) பெருமை கூறப்பெற்றுள்ளது. நெறி - சுருண்டு விளங்கும், தீண்டி - திருமேனியைத் தொட்டு, முப்போதும் - மூன்று வேளையும், (காலை, பகல், இரவு) ஆகமம் - சிவாகமம், அர்ச்சிப்பவர் - மலரால் வழிபடுபவர், அமரர்க்கு - தேவர்க்கு, இறையாய் - தெய்வமாய், ஈறில் செல்வம் - அழியாத செல்வத்துடன், உறைவாய - உரிய உலகு - சிவலோகம்.

முழுநீறு பூசிய முனிவர்

உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது பெற்றநல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத்(து) ஆரூர் அமர்ந்த அரடினக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக்(கு) அணியும் இறைவர்களே. (75)

பொருள்:

உலகம் பிரளயத்தால் கலக்கம் அடைந்தாலும், ஊழிக் காலத்தால் மாறுபட்டாலும், தம்முடைய சித்தம் ஒருகாலும் வேறுபடாத நியமத்தைப் பெற்ற, நல் அறிவினை உடையவர் யார் என்றால் - அளவிட முடியாத எண் குணங்களை உடைய திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருவடி நீழற்கீழ் இருக்கும், ஒளிபெற்ற திருநீற்றினை விதிப்படித் தம் திருமேனியில் தரிக்கும் முதன்மை உடையோர் ஆவர்.

சொ.பொ.வி :

பாடலில் தொகையடியார்களில் ஒருவராகிய முழுநீறு பூசிய முனிவர்களின் பெருமை கூறப்பெற்றுள்ளது. ஊழி - ஊழிக்காலம், உள்ளொருகால் - உள்ளத்தில் எழுந்த சிந்தனை, விலகுதல் - நீங்குதல், வித்தகர் - அறிவுடையவர், அலகில் - அளவில்லாத , பெருங்குணம் - இறைவனுக்குரிய எண்குணம் , வெண்ணீறு - திருநீறு, இறைவர் - முதன்மையானவர்.

அப்பாலும் அடிச்சார்ந்தார்

வருக்கம் அடைந்துநன் னாவலூர் மன்னவன் வண்தமிழால்
பெருக்க மதுரத் தொகை பிறைசூடி தன்பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்நஞ் செழுந்தவரே. (76)

பொருள்:

அடியார்களை வரிசையாக வைத்து, திருநாவலூர் அவதரித்த நம்பி ஆரூரர், ஒத்த மனதுடன் பிறை சூடிய சிவபெருமான் திருவடிக்குத் தமிழால், மதுரம் மிக்க திருத்தொண்டத் தொகை அருளிச் செய்த பொழுது, அப்பாலும் அடிச்சார்ந்தவர் என்று உலகில் கூறப்பட்டவர்கள் யார் என்றால் - சிவபெருமானின் சிவகணங்களுள் உள்ளவர்களாகிய நம் உயர்ந்த தவத்தை உடையவர்களே ஆவார்கள்.

சொ.பொ.வி :

பாடலில் தொகையடியார்களில் ஒருவராகிய அப்பாலும் அடிச்சார்ந்தார் என்பவர்களின் பெருமை கூறப்பெற்றுள்ளது. வருக்கம் - வரிசை, மதுரத்தொகை - திருத்தொண்டத் தொகை , ஒருக்கு மனத்தொடு - ஒத்த மனத்தொடு, தெரிக்கும் - தெரிந்து கூறப்பெற்றவர்கள், பல்கணம் - சிவகணம், நம்செழுந்தவரே - நமது உயர்ந்த தவத்தை உடையவர்கள்..

சுந்தரமூர்த்தி நாயனார்.

செழுநீர் வயல்முது குன்றினில் செந்தமிழ் பாடிவெய்ய
கழுநீள் தடக்கையன் ஈந்தபொன் ஆங்குக்கொள் ளாதுவந்தப்
பொழிநீ டருதிரு வாரூரில் வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு ஆரூரன் என்றுநாம் கேட்பதுவே. (77)

பொருள்:

செழுமையான நீர்வளம் உடைய வயல்கள் சூழ்ந்த திருமுது குன்றூரில், செம்மையான திருப்பதிகம் பாடி, மழுப்படையைக் கையில் தாங்கிய சிவபெருமான் கொடுத்த பொன்னை அவ்வூரில் பெற்றுக் கொள்ளாமல், மணிமுத்தாற்றில் இட்டுச் சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் வந்து, தாம் ஆற்றில் இட்ட பொன்னுக்கு வாசியும், பொன்னும் குறையாமல் கொண்டவர், மிக்க புகழினை உடைய நம்பியாரூரர் என்று நாம் கேள்விப் பட்டதாகும்.

சொ.பொ.வி :

இப்பாடலில் சுந்தரர் திருமுதுகுன்று மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் ,திருவாரூர்க் குளத்தில் பொன்னின் மாற்றும், பொன்னின் அளவும் குறையாது பெற்ற வரலாறு கூறப் பெற்றுள்ளது. முதுகுன்று - திருமுதுகுன்றம், (விருத்தாசலம்), செந்தமிழ் - பதிகம், மழு - மழுவாயுதம், ஆங்கு - அவ்வூரில், பொழிநீர்தரு - ஓடுகின்ற மணிமுத்தாறு, கெழுநீள் புகழ் - மிக்க புகழை உடைய.

பூசலார் நாயனார்

பதுமநற் போதன்ன பாதத்(து) அரற்கொரு கோயிலையாம்
கதுமெனச் செய்குவ(து) என்றுகொ லாம்என்று கண்துயிலா(து)
அதுமனத் தேஎல்லி தோறும் நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாம்நின்ற ஊர்தனில் பூசலையே. (78)

பொருள்:

புதிய மலர்களின் மணத்தைக் கொண்ட, தென்றற் காற்று உலாவுகின்ற திருநின்றவூரில் தோன்றிய பூசல் நாயனார், திருவருளைப் பெற்றது - நல்ல செந்தாமரையை ஒத்த திருவடிகளை உடைய சிவபெருமானுக்கு, ஒரு திருக்கோயிலை நான் விரைவில் செய்து முடிப்பது என்றைக்கு ஆகுமோ என்று உறங்காது , ஆலயத் திருப்பணியைத் தமது இதயத்தில் பகல் தோறும் செய்வதாய் நினைந்து அருள் பெற்றது என்று அறிஞர் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - பூசலார் நாயனார், ஊர் - திருநின்றவூர், தொண்டு - மனதில் கோயில் கட்டியது. பதுமம் - தாமரை, அரன் - சிவபெருமான், கதுமென - விரைவாக, துயிலாது - உறங்காது, எல்லிதோறும் - பகல், உலாம் - உலாவுகின்ற, நின்றஊர் - திருநின்றவூர்.

மங்கையர்க்கு அரசியார்.

பூசல் அயில்தென்ன னார்க்(கு)அன லாகப் பொறாமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரரக்(கு)அறி வித்(து)அவரால்
நாசம் விளைத்தாள் அருகந் தருக்குத்தென் னாட்டகத்தே. (79)

பொருள்:

பகைவருடன் போர் செய்வதற்குரிய வேற் படையை உடைய, நின்ற சீர் நெடுமாற நாயனார்க்கு வெப்புநோய் உண்டாக, அதனைப் பொறுக்காது, மணம் கமழும் மலர்களைச் சூடிய பாண்டிமா தேவி என்னும் அரசியார், உலகத்தார் அறியும்படித் திருஞான சம்பந்தருக்கு அந்நோயைத் தெரிவித்து, அவரால் பாண்டிய நாட்டில் சமணருக்கு அழிவை விளைவித்தவள் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

சொ.பொ.வி :

பாட்டில் இடம்பெற்ற அடியவர் - மங்கையர்க்கரசியார், ஊர் - மதுரை, தொண்டு - சிவத்தொண்டு. பூசல் - பகைமை,

அயில் - வேல், தென்னார் - பாண்டியர் (நின்றசீர் நெடுமாறன்), அனல் - வெப்புநோய், மானி - அரசி, தேசம் - உலகம், விளங்க - அறிய, தமிழாகரர் - ஞானசம்பந்தர், நாசம் - கேடு, அருகந்தருக்கு - சமணருக்கு, தென்னாட்டகத்தே - பாண்டியநாடு.

நேச நாயனார்.

நாட்டம்இட்(டு) அன்றுஅரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற்ற வன்என்பர் சைவத் தவர்அரையில்
கூட்டும் அகப்படக் கோவணம் நெய்து கொடுத்துநன்மை
ஈட்டும்அக் காம்பீலிச் சாலிய நேசனை இம்மையிலே. (80)

பொருள்:

சிவனடியார்களது இடையில் அணியும் உடையோடு, கீழ் உடையாம் கோவணத்தையும் நெய்து கொடுத்துச் , சிவபுண்ணியத்தைச் சம்பாரித்த, காம்பீயம் என்னும் ஊரில் அவதரித்த, சாலியர் குலத்து முதல்வராகிய நேச நாயனாரை இவ்வுலகத்தில் - கண்ணை இழந்து திருமால் அருச்சித்து வழிபாடு செய்ய, அவருக்குச் சக்கரப்படையைக் கொடுத்தருளிய சிவபெருமானது திருவடிகளைத் , தன் இதயத்துத் தியானிக்கப் பெற்றவர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - நேச நாயனார். ஊர் - காம்பீலி, தொண்டு - அடியார்களுக்கு துணிநெய்து ஆடை கொடுத்தல். நாட்டம் - கண், இட்டு - தோண்டிஇட்டு, அரி - திருமால், வந்திப்ப - வழிபாடு செய்ய. வெல்படை - வெற்றி பொருந்திய சக்கரப்படை, தாள்தரிக்கப் பெற்றவன் - திருவடிகளை (தாள்) இதயத்தில் தாங்கியவன், சைவத்தவர் - சைவ அடியார்கள், அரை - இடை, அகப்படம் - ஒருவகை ஆடை, கோவணம் - கீழுடை, சாலிய - சாலியர்குலம், இம்மை - இவ்வுலகத்தில்.

செங்கட்சோழ நாயனார்

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தரணிநீடு ஆலயங்கள்
செய்வித்த வன்திருக் கோச்செங்க ணான்எனும் செம்பியனே.(81)

பொருள்:

கருமை நிறம் தங்கிய திருமிடற்றினை உடைய சிவபெருமான் அருளிய, சைவ நெறி அன்றி வேறு சமய நெறியை மனதில் நினையாத, தெய்வீக உணர்வு பொருந்திய சோழர் குலத்தில் அவதரித்தவரும், முன் பிறப்பில் சிலந்திப் பூச்சியாய் திருவானைக்காவல் ஊரில் பந்தர் இட்டு, பின் சைவராக இம்மையில் அவதரித்து, நிலவுலகில் பல சிவாலயங்களில் பணிகள் செய்தவரும் யார் என்றால் - செல்வம் மிக்க கோச்செங்கட் சோழ நாயனார் என்னும் சோழனே.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியவர் - கோச்செங்கட் சோழ நாயனார். ஊர் - சோழநாடு, தொண்டு - சிவாலயத் தொண்டு செய்தமை, மை - கருமை, கண்டன் - கழுத்து, முன்பு - முன்பிறவி, பந்தர் -திருவானைக்கா இறைவனுக்கு முன் பிறவியில் இச்சோழன் சிலந்தியாய்ப் பிறந்து , அவர் தலையில் இலைகள் விழாதவாறு தன் நூலைக் கட்டியமை, தரணி - உலகத்தில், நீடு ஆலயங்கள் - பல ஆலயங்கள், செம்பியன் - சோழன்.

கோச்செங்கட் சோழ நாயனார் - தொடர்ச்சி.

செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகம்எய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலத்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கல் கோச்செங்ணான் என்னும் நித்தனையே.(82)

பொருள்:

மணம் வீசும் மலர்களைக் கொண்ட , சோலை சூழ்ந்த தில்லையின் கண் எழுந்தருளியிருக்கும் , நடராசப் பெருமானைச் சூழ்ந்திருக்கும்படித் தில்லை மூவாயிரவர்க்கு மாளிகை கட்டிக் கொடுத்தவராகிய - வேப்பம்பூ மாலை அணிந்த கோச்செங்கட் சோழ நாயனார் என்னும் சீவன் முத்தரை, தில்லையில் உள்ள சபையைப் பொன்னால் அலங்கரித்து, அதன் பயனாய்ச் சிவலோகத்தை அடைந்து, சிவபெருமானின் திருவடி நீழலின்கண் சென்ற, இரணிய வன்மச் சோழனது பரம்பரையில் அவதரித்த முதல்வன் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

இப்பாடலிலும் கோச்செங்கட் சோழ நாயனாரின் புகழ் கூறப்படுகிறது. செம்பொன் - சிவந்தபொன், நம்பன் - சிவபெருமான், கழல் - திருவடி, குலமுதல் - மரபில் முதன்மையானவன், வம்பு - மணம், மறைவளர்த்தான் - வேதம் ஓதும் தில்லை மூவாயிரவர், நிம்ப - வேப்பம்ப தொங்கல் - மாலை, நித்தனை - சீவன்முத்தரை.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்.

தனையொப் பரும்எருக்கத்தம் புலியூர்த் தகும் புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண் டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர் கோன்செந் தமிழோடிசை
புனையப் பரன்அருள் பெற்றவன் என்பர்இப் பூதலத்தே. (83)

பொருள்:

ஒப்பில்லாத எருக்கத்தம்புலியூர் திருத்தலத்தில் அவதரித்த, பெரும் புகழை உடையோராகிய , நினைவிற்கு அடங்காத பத்தியை உடைய, திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரை , நீண்ட கிளைகளைக் கொண்ட பூ மரங்களை உடைய, சோலைகள் சூழ்ந்த சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்தர் திருப்பதிகங்கள் பாடுந்தோறும் , பண்ணோடு யாழில் வாசிக்க, இந் நிலவுலகத்தில் சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர் என்று அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், ஊர் - எருக்கத்தம்புலியூர், தொண்டு - திருஞானசம்பந்தர் பதிகங்களுக்குப் பின்னணி இசையாக யாழ் வாசிப்பது. ஒப்பரும் - ஒப்பில்லாத, நினையொப்பரும் - நினைவு கடந்த பெருமை உடையவர், சினை - கிளை, சண்பையர் - திருஞானசம்பந்தர், பரன் - சிவபெருமான்.

சடைய நாயனார்

தலம்விளங் குந்திரு நாவலூர் தன்னில் சடையன்என்னும்
குலம்விளங் கும்புக ழோனை உரைப்பர் குவலயத்தின்
நலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்
பலன்விளங் கும்படி ஆரூ ரனைமுன் பயந்தமையே. (84)

பொருள்:

நிலவுலகத்தில் திருநாவலூரில் அவதரித்த, குலத்தால் சிறந்த சடையனார் என்னும் புகழுடையவரை, உலகத்தில் தவநெறிகள் விளங்கும் பொருட்டும், நாம் அனைவரும் நன்னெறி அடையும் பொருட்டும், நல்ல தவத்தால் ஆகிய பலன் விளங்கும் பொருட்டும், நம்பியாரூரரைப் பெற்ற காரணத்தால் இவ்வுலகத்தில் அறிஞர்கள் புகழ்ந்து கூறுவார்கள்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - சடைய நாயனார். ஊர் - திருநாவலூர், தொண்டு - சுந்தரரைப் பெற்றமை. தலம் - திருத்தலம், குலம் - சிவாசாரியார் குலம், குவலயம் - உலகம், நலம் -தவநெறிகள், பயந்தமை - பெற்றமை.

இசைஞானியார்

பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள் ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உகைத்தநற் காளையை என்றும் கபாலங்கைக்கொண்(டு)
அயந்தான் புகும்அரன் ஆரூர்ப் புனித அரன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத்(து) என்றும் உரைப்பது ஞானியையே.(85)

பொருள் :

சினமுடைய சிவந்த கண்களையும், வெள்ளை நிறத்தையும், துளையுடைய பனை போலும் நீண்ட துதிக்கையை உடைய வெள்ளை யானையைத் , திருக்கயிலைக்குச் செலுத்திய நம்பியாரூரரைப் பெற்றவள் என்றும், மண்டை ஓட்டைத் திருக்கரத்தில் தாங்கிக் கொண்டு பிச்சை எடுத்து உண்ணும் முதல்வனாகிய , திருவாரூரில் எழுந்தருளி அருளும் சிவபெருமானின் திருவடிகளைத், தனது இதயத்தில் எந்தநாளும் தியானிக்கின்றவள் என்றும், இசைஞானியாரை அறிஞர்கள் கூறுவர்.

சொ.பொ.வி :

பாடலில் இடம்பெற்ற அடியார் - இசைஞானியார், ஊர் - திருநாவலூர், தொண்டு - சுந்தரரைப் பெற்ற தாய்மை. கறுவுடை

- சினமுடைய, பொள்ளல் - துவாரம், பனைக்கை - நீண்ட தும்பிக்கை, கயம் - யானை, உகைத்த - செலுத்திய, கபாலம் - மண்டையோடு, அயந்தான் - பிச்சை ஏற்றான், புனிதஅரன் - சிவபெருமான், நயந்தாள் - தியானிக்கின்றவள், ஞானி - இசைஞானியார்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

ஞானஆ ரூரைச் சேரரை அல்லது நாம்அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக்(கு) அவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் அறிவற்(கு) அரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே. (86)

பொருள்:

ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த தேவர்களாலும் அறிவதற்கு அருமையான, வட கயிலையில் உள்ள சிவபெருமானின் கோயிலில் வாழும், பெரிய தவத்தை உடைய அடியவர் திருக்கூட்டத்தில், சிவஞானம் மிக்க நம்பியாரூரரையும், சேரமான் பெருமாள் நாயனாரையும் அல்லாது, மானுட உடம்புடன் போனவரை யாம் அறியோம்.

சொ.பொ.வி:

இப்பாடலில் சுந்தரர் பெருமானும், சேரமான் பெருமாள் நாயனாரும் மானுட உடம்போடு , திருக்கயிலைக்குச் சென்று தவக்கூட்டத்தாரோடு ஒருசேர வாழ்ந்திருந்த நிகழ்ச்சி கூறப்பெற்றுள்ளது. ஞானம் - சிவஞானம், சேரர் - சேரமான் பெருமாள் நாயனார், மானவ ஆக்கை - மனித உடம்பு, வளரொளிப்பூண் - ஒளிபொருந்திய அணிகலன்கள், அறிவற்கு அரிய - அறிய முடியாத, வடகயிலை - சிவபெருமான் வாழும் கயிலாயம், கோனவன் - சிவபெருமான்.

திருத்தொண்டத் தொகையில் உள்ள தொகை அடியார்கள் தனியடியார்கள்

கூட்டம்ஒன் பானொ(டு) அறுபத்து மூன்று தனிப்பெயராய்
ஈட்டும் பெருந்தவத் தோர்எழு பத்திரண் டாம்வினையை
வாட்டும் தவத்திருத் தொண்டத் தொகைபதி னொன்றின் வகைப்
பாட்டும் திகழ்திரு நாவலூ ராளி பணித்தனனே. (87)

பொருள் :

திருக்கூட்டத் தொகையில் வரும் அடியார்கள் ஒன்பதாம். அத்துடன் அறுபத்து மூன்று அடியார்கள் தனியடியார்களாம். இவ்வாறு பெருந் தவத்தினைச் சுட்டும் அடியார்கள் எழுபத்திரண்டு ஆவர். திருநாவலூர் நம்பியானவர் வினையைப் போக்கும், தவத்தைத் தரும் திருத்தொண்டத் தொகையினில் பதினொன்றாக வகுத்த பாட்டுக்களையும் அளவுபடுத்தித் தந்தனனே.

பொருள்:

கூட்டம் - திருக்கூட்டம், ஒன்பான் - தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர் என்ற இரண்டு கூட்டத்தோடு பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன் என்ற திருப்பாட்டில் போற்றப் பெற்ற கூட்டத்தினர் எழுவர் ஆக ஒன்பதின்மர்ஈ தனிப்பெயர் அறுபத்துமூன்று - திருநீலகண்டக் குயவனார் முதல் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஈறாகத் தனியடியார்கள் அறுபது பேருடன், சடையனார், இசைஞானியார், திருநாவலூர்க்கோன் ஆகிய மூவரையும் சேர்த்து அறுபத்து மூவர். ஈட்டும் பெருந்தவத்தோர் - பெருந்த தவத்தை ஈட்டியவர்கள், வினையை வாட்டும் - திருத்தொண்டத்தொகைப் பாடலின் பயன் வினையினை வாட்டுகின்ற நல்லநெறியில் செல்வதாகும். திருநாவலூர்ஆளி - நம்பியாரூரர்.

திருத்தொண்டத் தொகைப் பதிகங்களின் முதற்குறிப்பு.

பணித்தநல் தொண்டத் தொகைமுதல் தில்லை இலைமலிந்த
அணிதிகழ் மும்மை திருநின்ற வம்பறா வார்கொண்டதோர்

இணைத்திகழ் பொய்யடி மைகறைக் கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனொடே. (88)

பொருள்:

திருநாவலூர்ஆளி அருளிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகப் பாட்டுக்களின் முதற்குறிப்பாவன - தில்லை, இலைமலிந்த, மும்மையால், திருநின்ற, வம்பறா, வார்கொண்ட, பொய்யடிமை, கறைக்கண்டன், கடல்சூழ்ந்த, பத்தராய், மன்னியசீர் என்று தொடங்கும் சொற்களைக் கொண்ட பதினோரு பாடல்களாம்.

சொ.பொ.வி :

பணித்த - கூறிய, முதல் - முதற்சொல், அணிதிகழ் - அழகுடன் விளங்கும், இணைத்திகழ் - பொருந்த விளங்கும், மணித்திகழ் - மணிகள் போல் விளங்கும்.

நூற் பயன்

ஓடிடும் பஞ்சேந் திரியம் ஒடுக்கிஎன் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம்நின்(று) எத்தவம் செய்தனன் வானின்உள்ளோர்
சூடிடும் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையில்உள்ள
சேடர்தம் செல்வப் பெரும்புகழ் அந்தாதி செப்பிடவே. (89)

பொருள்:

தேவர் உலகத்தில் உள்ள தேவர்களும், தங்கள் தலையில் சூடிடும் சிறப்பினை உடைய திருவடிகளைக் கொண்டவர்களாகிய, திருத்தொண்டத் தொகையில் போற்றப்பெற்றப் பெரியோர்களது பெரிய புகழினைப் போற்றும், இத்திருவந்தாதியினைச் சொல்ல, கட்டுப்பட்டு இல்லாது ஓடுகின்ற ஐந்து இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி, என் வினைகள் எல்லாம் அறும்படி நின்று, என்ன பெருந்தவத்தினைச் செய்தேனோ?

சொ.பொ.வி :

இப்பாட்டில் இத்திருவந்தாதியை ஐந்து இந்திரியங்களையும் ஒடுக்கி, வினையை வாட்டும் தவம் செய்தால் அன்றி, செப்புவது அரிது என்பதும், தவப்பயன் எய்வதும், ஊழின் பயனாகக் கூறப்பெற்றுள்ளது. ஓடிடும் - தன் போக்கில் சென்றிடும், ஐந்து

இந்திரியங்கள் - மெய், வாய், கண், செவி, மூக்கு, வாடிடும் வண்ணம் - வருந்தும் வண்ணம், வானில் உள்ளோர் - தேவர் உலகத்தில் உள்ளோர், பாதத்தர் - திருவடிகளை உடையவர், சேடர் - சிவத்தன்மை பெற்ற பெரியோர்.

இத்துடன் திருத்தொண்டர் திருவந்தாதி நிறைவு பெறுகிறது என்றாலும் இறைவணக்கம் என்ற தலைப்பு சில பிரதிகளில் நூலின் முதற் பகுதியிலும், சில பிரதிகளில் நூலின் நிறைவுப் பகுதியிலும் இடம் பெற்றுள்ளது. அண்மையில் வெளிவந்த தருமையாதீனப் பதிப்பில் இறுதியில் அமைவதே சிறப்பு என்று கூறப்பெற்றுள்ளது.

பொன்னி வடகரை சேர்நாரை யூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்கும் அந்தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத்துணை துணையே.

பொருள்:

காவிரியின் வடகரையில் உள்ள திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் யானை முகத்தினை உடைய பொல்லாப் பிள்ளையார், அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய ஊரையும், தேசத்தையும், குலத்தையும், திருத்தொண்டையும் அருளிச் செய்ய, சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க, நம்பியாரூரர் பாடியருளும் சிறப்பினை உடைய திருத்தொண்டத் தொகைக்கு, வகையாக விளங்கும் இத்திருவந்தாதியைப் பாடியருளிய ,அந்தணர் குலத்தில் அவதரித்த , நம்பியாண்டார் நம்பியினது அழகிய இரண்டு திருவடிகளும் எமக்குப் பிறவி நோயை நீக்குவதற்குத் துணையாகும்.

சொ.பொ.வி :

இப்பாடல் பின்வந்தோரில் ஒருவர் நம்பியாண்டார் நம்பியின் பெருமையைச் சிறப்பித்துப் பாடியதாகும். அவர் யார் என்று அறிய முடியவில்லை. அப்பாடலை இந்நூலைப் பதிப்பதித்தவர்கள் இப்பாடலை நூலின் முன், பின்னாகச் சேர்த்திருக்க வேண்டும்.

மேலும் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் குறிப்பிட, நம்பியாண்டார் நம்பி இத்திருவந்தாதியை அடியார்களின் பெயர், ஊர், தொண்டு என்ற மூன்றினை மட்டும் இடம்பெற வைத்துப்

பாடினார் என்ற குறிப்பு இடம் பெற்றிருக்கிறது. பொன்னி - காவிரியாறு, திருநாரையூர் - நம்பியாண்டார் நம்பியின் ஊர், புழைக்கை - துளையுள்ள தும்பிக்கை, முகம் - யானைமுகன், பதி - ஊர், தே - நாடு, மரபு - குலம், செயல் - தொண்டு, பன்ன - கூட, வகை - வகைநூலாக, மறைக்குலம் - அந்தணர்குலம், பாதம் - திருவடிகள்.

திருத்தொண்டர் திருவந்தாதி மூலமும் எளிய உரையும் முற்றிற்று. திருச்சிற்றம்பலம்.

பக்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.


விழா நாயகர்கள்:
பேராசிரியர். பழ. முத்தப்பன் - அழகம்மை முத்தப்பன்



Perfect Graphics, Hosur ©: 94431 50000